உதயன்

பக்கங்கள் - 16 விலை - ரூபா 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :162 சித்திரை 22 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 05 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

முச்சந்தி முரளி




# மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுபாடு மே 11 ஆம் திகதி தளர்வு

கொழும்பு, மே 5

வடக்கு மாகாண வர்த்தகர்கள் பாஸ் நடைமுறையால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் ஏனைய மாகாணங்களில் இந்த நெருக்கடிகள் எதுவுமில்லை. இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த முன்னாள் அமைச்சரும், அவசர சேவைக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ, எதிர்வரும் 11ஆம் திகதியுடன் மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடு தளர்த்தப்படும். அதன் பின்னர் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாது என்று குறிப்பிட்டுள்ளார்.
14

## கொரோனா 751

கொழும்பு, மே 5

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 33 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 751 ஆக அதிகரித்துள்ளது.

அதேவேளை,
14

## குணமானார் முதல் சிப்பாய்

கொழும்பு, மே 5

கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட முதலாவது கடற்படைச் சிப்பாய் குணமடைந்து நேற்றுமுன்தினம் வீடு திரும்பினார் என்று கடற்படை தெரிவித்துள்ளது. கடந்த 25 ஆம் திகதி கொரோனா தொற்றுடன் அடையாளம்காணப்பட்ட இவர் ஐ.டி.எச். மருத்துவம
14

## சிறுமி வன்புணர்வு இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 5

பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தினர் என்ற குற்றஞ்சாட்டில் சிறுமியின் சகோதரனையும், மாமன் முறையிலான இன்னொருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

உரும்பிராயைச் சேர்ந்த 19 மற்றும் 22 வயதுடைய அந்த இளைஞர்கள் நேற்றுக்
14

## நாடாளுமன்றைக் கூட்டினால் பிரச்சனைகளைத் தீர்க்கலாம்

*ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனக் குறிப்பிட்டு மஹிந்தவிடம் சம்பந்தன் அறிக்கை சமர்ப்பிப்பு*

யாழ்ப்பாணம், மே 5

நாட்டின் பிரச்சினைகள் தீர ஒத்துழைப்பை ஆதரவை வழங்க நாங்கள் தயார். ஆனால் அதற்கு நாடாளுமன்றம் மீளக்கூட்டப்பட வேண்டும். அதன் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெறலாம் என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த் தேசியக்
14

## அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை

கொழும்பு, மே 5

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் விவகாரத்தில் நாம் அக்கறையாக இருக்கின்றோம். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வாக்குறுதியளித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் முக்கிய சந்திப்பு நேற்று மாலை பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து கூட்டமைப்பினர் பிரதமரின் கவ
14

## புதிய நாடாளுமன்றில் அரசமைப்பை பேசுவோம்

*சம்பந்தனுக்குப் பீரிஸ் பதில்*

கொழும்பு, ஏப்.5

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அமையவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு தொடர்பில் இரு தரப்பும் (அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) உட்கார்ந்து பேசுவோம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான ஜி.எல்.பீரிஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் நேரில்
08

## மஹிந்தவை இல்லத்தில் சந்தித்து கூட்டமைப்பு பேச்சு

*சம்பந்தன் தலைமையில் 11 முன்னாள் எம்.பிக்கள் பங்கேற்பு*

கொழும்பு, மே 5

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு நேற்று மாலை நடைபெற்றது.

கொழும்பு
08

## தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்த பெண் யாழில் சாவு

யாழ்ப்பாணம், மே 5

கொடிகாமம் தனிமைப்படுத்தல் மையத்திலிருந்த பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். அவர் முட்டு வருத்தம் காரணமாக உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
14

## தனக்குத் தானே தீவைத்து தந்தை உயிர் மாய்ப்பு

*ஊரடங்கால் பிள்ளைகளை பார்க்க முடியாத மன விரக்தி!*

கிளிநொச்சி, மே 5

தவறான முடிவெடுத்துத் தனக்குத் தானே தீ வைத்து, நான்கு பிள்ளைகளின் தந்தை உயிர்மாய்த்துள்ளார். ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் உள்ளதால் யாழ்ப்பாணத்தில்
14

## கொரோனாவால் பெண் உயிரிழப்பு

கொழும்பு, மே 7

கொரோனா தொற்றுக்கு இலக்கான பெண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். ஹோமாகம ஆதார மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று சுகாதார அமைச்சு நேற்று அறிவித்தது.

உயிரிந்த பெண் குருநாகல் பொல்பித்திகமவை சேர்ந்தவர் என்றும் 72 வயதுடையவராவார். இவர் வெலிசறை
08

## போதனா மருத்துவமனையில் பி.சி.ஆர் சோதனை ஆரம்பம்

*49 பேருக்கு தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது*

யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று முதன் முதலாக முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 49 பேருக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின்
08

# பொதுப் போக்குவரத்து 11இல் ஆரம்பிக்கப்படும்

## பயணிகளின் தொகையில் கட்டுப்பாடு அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



**கொழும்பு, மே 5**
**அனைத்து பொதுப் போக்குவரத்து சேவைகளும் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் சுகாதார மற்றும் பாதுகாப்பு துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மாத்திரமே இடம்பெறும் என்று போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர மீண்டும் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் கொழும்பில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

இதன்போது, தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமது போக்குவரத்து சேவைகளை முன்னெடுப்பதற்காக ஒரு மாத காலத்துக்கு எரிபொருள் நிவாரணத்தை வழங்குமாறு விடுத்துள்ள கோரிக்கை குறித்து அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,

தனியார் பேருந்து உரிமையாளர்களின் கோரிக்கை நியாயமானது. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் நிவாரணம் வழங்குவது சிரமமானது என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அத்தியாவசிய சேவைகளுக்காக அரசமற்றும்தனியார்துறைகளுக்கு வரும் ஊழியர்களுக்கு அலுவலக ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படும். இருப்பினும், அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களால் பரிந்துரைக்கப்பட்ட பட்டியலுக்கு உட்பட்ட ஊழியர்களுக்கு மட்டுமே இந்த அனுமதி வழங்கப்படும்.

இதற்கான அனுமதியை வாரந்தோறும் பெற வேண்டும். இதற்கான கோரிக்கை ஒவ்வொரு வியாழக்கிழமைக்கும் முன்னதாக ரயில்வே திணைக்களத்துக்கு அனுப்பவேண்டும்.

ரயிலில் பயணிக்க அனுமதிக்கப்பட்டவர்களுக்கு அதுதொடர்பான குறுந்தகவல் எஸ்.எம்.எஸ். மூலமாக அறிவிக்கப்படும். அதனை ரயிலில் பயணிப்பதற்கு முன்னர் பாதுகாப்புப் பிரிவினரிடம் காட்ட வேண்டும் என்று ரயில்வே திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

ஒவ்வொரு ரயில் நிலைய மேடைகளிலும் தலா இரண்டு சிப்பாய்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

ஒவ்வொரு நிறுவனத்துக்கும் தனித்தனியாக பேருந்துகளை வழங்க முடியும் என்று இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

பேருந்துகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்கனவே பல நிறுவனங்கள் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. (த)

## பொதுசன மாதாந்த கொடுப்பனவு இன்று

சாவகச்சேரி, மே 5

தென்மராட்சியில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவு பெறுவோருக்கான மே மாதக் கொடுப்பனவுகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அஞ்சல் திணைக்களத்தினர் இன்று தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு தொழிற்சங்க நடவடிக்கை இடம்பெறுமாயின் அந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு மாற்று நடவடிக்கை என்ன என்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)



## சங்கானையில் 2 மாதங்களில் டெங்கு 31

யாழ்ப்பாணம், மே 5

யாழ்ப்பாணம் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கடந்த இரு மாதங்களில் மட்டும் 31 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உலகமே கொரோனா அச்சத்தில் மூழ்கியுள்ள நிலையில் மற்றுமோர் உயிர்க்கொல்லி நோயான டெங்குத் தாக்கம் அதிகரிக்கின்றது.

சங்கானையில் மார்ச் மாதம் 16 பேரும், ஏப்ரல் மாதம் 15 பேரும், இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அந்த நபர்களின் வசிப்பிடங்களை சுகாதாரப் பிரிவு நேற்று ஆராய்ந்துள்ளது. (த-105)

## தேயிலைச் சாயம் 10 ஆயிரம் ரூபா !

### யாழ்ப்பாண நகரில் சம்பவம்

போதைக்கு அடிமையானவர்களிடம் ஏமாற்றிப் பணம் பறித்த இரண்டு சம்பவங்கள் கடந்த இரு தினங்களாக யாழ்ப்பாண நகரில் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண நகரில் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவர் தன்னிடம் 3 போத்தல் மதுபானம் உள்ளது என்று தெரிவித்து அதற்கு 3 ஆயிரத்து 500 ரூபா வீதம் 10 ஆயிரத்து 500 ரூபா கோரியுள்ளார்.

அதன்படி யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி வழியாக ஜும்மா பள்ளிவாசல் வீதியில் வைத்து 10 ஆயிரத்து 500 ரூபாவைப் பெற்ற அந்த நபர் "பொலிஸ் நிற்கின்றது உடனடியாக ஓடு" என்று கூறி 3 போத்தல்கள் கொண்ட பையை கொடுத்துவிட்டு பணத்தைப் பெற்றுக்கொண்டு மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து சென்றுவிட்டார்.

பணம்கொடுத்து போத்தல்களைப் பெற்றுக்கொண்டவர் அழகு சாதனப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் பணிபுரிபவர். அவர் தனது இடத்துக்குச் சென்று போத்தல்களை வெளியே எடுத்தபோதே அவற்றுள் சாராயத்துக்குப் பதில் தேயிலைச் சாயமே காணப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)



கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை குருதிக் கொடை நடைபெற்றது. இதில் 30 உறுப்பினர்கள் குருதிக்கொடை வழங்கினர். அமரர் திருச்செல்வம் தேவசேனா ஞாபகார்த்தமாக அவருடைய குடும்பத்தினர் இதற்கு அனுசரணை வழங்கியிருந்தனர். (த)

## பொது இடங்களில் தொற்று நீக்கல்

யாழ்ப்பாணம், மே 5

யாழ்.மாநகர பிரதேசத்தில் பொது இடங்களில் தொற்று நீக்கி மருந்து விசிறும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளன. வீதியோரங்களில்மரக்கறி, மீன்வைத்து விற்பனைசெய்யும் இடங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கக் கடைகள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றை அண்டிய பகுதிகளில் தொற்று நீக்கி மருந்து விசிறும் பணிகள் மாநகர சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்டம் தற்போது நீக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் நடமாடும் பொது இடங்களில் தொற்று நீக்கி மருந்து விசிறும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-17)

## கல்முனையில் இன்னும் 3 தனிமை நிலையங்கள்

கொழும்பு, மே 5

அம்பாறை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில், மேலும் மூன்று தனிமைப் படுத்தல் முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

வெலிசறை கடற்படை முகாமில் கொரோனாத் தொற்று ஏற்பட்டதைத் தொடர்ந்து விடுமுறையில் சென்ற முப்படையினரையும், மீள அழைத்துள்ளதால் அவர்களை தனிமைப்படுத்துவதற்குரிய தங்குமிட வசதி பற்றாக்குறை காரணமாகவே, மேற்படி தனிமைப்படுத்தல் முகாம்கள் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

காஞ்சிரங்குடா கால்நடை பயிற்சி நிலையத்தில் 40 பேரும், கல்முனை வெஸ்லி உயர்தரப் பாடசாலையில் 114 பேரும், கல்முனை சுபத்திரா ராமர் விகாரையில் 44 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் தனிமைப்படுத்தலிலிருந்த 6 பெண் தாதிய அலுவலர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர். வெலிசறை கடற்படை முகாமில் கடமையாற்றிய பாணமையைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் மருத்துவமனைக்கு வந்து அங்கு கடமையாற்றும் மனைவியான பெண் தாதிய அலுவலருடன் பழகியிருந்தார். அதனையடுத்து 6 பெண் தாதிய அலுவலர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். (த)

## மிருசுவில் கொலை: மூன்று பேரும் பொலிஸ் பிடிக்குள்

சாவகச்சேரி, மே 5

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மிருசுவில் வடக்கு மன்னங்குறிச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் ஒருவர் வெட்டிக்கொல்லப்பட்ட நிலையில், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவரும் சந்தேகநபர்கள் மூவரையும் பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களில் ஒருவர் சாவகச்சேரியிலும் இருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சாவகச்சேரி மருத்துவமனைக்குச் சென்ற நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லுமாறு பொலிஸாரைப் பணித்தார்.

இதேவேளை, சம்பவத்தில் சாவடைந்தவரின் மனைவியும் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# 17,48,020 பேருக்கு 5000 கொடுப்பனவு

கொழும்பு, மே 5

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலை அடுத்து இதுவரை 17 லட்சத்து 48 ஆயிரத்து 20 பேருக்கு 5 ஆயிரம் ரூபா சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று சமுர்த்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக 8.05 பில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது என்று சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 2 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களுக்கும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதற்காக 12.62 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவை வழங்குவதற்காக மற்றொரு குழுவும் இனங்காணப்பட்டுள்ளது என்றும், இந்தக் கொடுப்பனவுக்காகப் பலர் விண்ணப்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# சிறார்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு!

## ஊரடங்கு காலப்பகுதியில் 352 முறைப்பாடுகள்




கொடிகாமம், மே 5

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து நாடுமுழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட நிலையில், சிறுவர்கள் மீதான கொடுமைகள் தொடர்பில் 352 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் 1929 எனும் துரித அழைப்பு எண் வழியாகவே இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அதன் தலைவர் பேராசிரியர் முதித விதானபதிரன தெரிவித்தார். இதில், 152 முறைப்பாடுகள் குழந்தைகள் தங்கள் சொந்த வீடுகளில் உடல் மற்றும் உளவியல் கொடுமைகளுக்கு இலக்காகி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டமை தொடர்பானவை என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-159)

# பசு உரிமையாளருக்கு 50,000 ரூபா இழப்பீடு!


## கொலை செய்தவரை வழங்குமாறு மன்று உத்தரவு

முல்லைத்தீவு, மே 5

பசு மாட்டை வாளால் வெட்டிக் கொலை செய்தமைக்காக, மாட்டின் உரிமையாளருக்கு 50 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம்.

அயல் வீடொன்றுக்குச் சென்ற பசு மாடு ஒன்று அந்த வீட்டிலிருந்த நபரால் வெட்டிக் கொல்லப்பட்டது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்திருந்தது. பசுவைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அந்த வீட்டிலிருந்த இளைஞர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் ப.பரஞ்சோதியிடம் முற்படுத்தப்பட்டார்.

விசாரணைகளை அடுத்து, பசுவின் உரிமையாளருக்கு இழப்பீடாக 50 ஆயிரம் ரூபாவை எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். கைது செய்யப்பட்டவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஐ-19)



# 9 பன்றிகள் மீட்பு ஒருவர் கைது

மட்டக்களப்பு, மே 5

அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோதமான முறையில் இறைச்சிக்காகக் கொண்டு செல்லப்பட்ட பன்றிகள் மீடகப்பட்டன என்றும், அவற்றை ஏற்றிச் சென்ற வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நடந்துள்ளது.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் இருந்து பொலநறுவைக்குக் கொண்டுவரப்பட்ட ஒன்பது பன்றிகள் இவ்வாறு மீட்கப்பட்டன. இவை உரிய அனுமதி பெறப்படாது கொண்டு வரப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப)

# சுகாதார நடைமுறைகளுடன் வவுனியாவில் மக்கள் நடமாட்டம்

வவுனியா, மே.5

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டபோது மக்கள் சுகாதார நடமுறைகளைப் பின்பற்றி, தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர்.

கடந்த 30ஆம் திகதி இரவு 8 மணிக்கு நடைமுறைப் படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை 5 மணிக்கு நீக்கப்பட்டது. அதையடுத்து வவுனியா நகரில் மக்கள் தமது தேவைகளின் நிமித்தம் வருவதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

வவுனியா காமினி மகா வித்தியாலயம் மற்றும் தமிழ் மகா வித்தியாலயம், ஹறவப்பொத்தானை விதிகளை அண்மித்த பகுதிகளில் மரக்கறி வியாபாரங்களை மேற்கொள்வதற்கு மாவட்டச் செயலகம் மற்றும் நகர சபையால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

ஊரடங்கு காலத்தில் விவசாயிகளிடமிருந்து மரக்கறிகள் மற்றும் பழங்களை கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகளை கமநல அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொண்டமை காரணமாகவும் பொதுமக்கள தேவையின்றி வவுனியா நகருக்கு வருவது குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அனைத்து அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் பொதுமக்களின் சேவைக்காக திறந்திருந்ததுடன், வங்கிகள், நீதிமன்றம், வைத்தியசாலை மற்றும் வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் சமூக இடைவெளியை பேணுவதையும், முகக் கவசங்களை அணிந்து நடமாடுவதையும் அவதானிக்க முடிந்தது. (ப-110)



நாயிடமிந்து தப்பித்து

# பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்த மான்

பதுளை, மே 5

நாயொன்றிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள பொலிஸ் நிலையத்துக்குள் புகுந்த மான் தொடர்பான சம்பவமொன்று ஹல்துமுள்ளைப் பகுதியில் இன்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

ஹல்துமுள்ளை காட்டுப்பகுதியிலிருந்த மானொன்று வயல் வெளிக்கு வந்த போது, அந்த மானை நாயொன்று கண்டு துரத்த ஆரம்பித்தது. மானும் நாயிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேகமாக ஓடியது. இறுதியாக, ஹல்துமுள்ளை பொலிஸ் நிலையத்துக்குள் சென்று தஞ்சமடைந்தது.

மான் பொலிஸ் நிலையத்திற்குள் சென்றதும், மானைத் துரத்தி வந்த நாய் வந்த வழியாக திரும்பி ஓடியது என்று தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் நிலையத்திற்கு வந்த மானை பொலிஸார் பிடித்து, அதன் கால்களில் ஏற்பட்டிருந்த காயங்களுக்கு மருந்து கட்டி, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (ப)



# ஊரடங்கு உள்ள வேளையிலேயே அ.அட்டை இலக்க நடைமுறை!

கொழும்பு, மே 5

**தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தைப் பயன்படுத்தி வெளியில் செல்லும் திட்டமானது ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் மாத்திரமே நடைமுறையில் இருக்குமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது; மக்கள் அநாவசியமாக ஒன்று கூடுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்துக்கு ஏற்ப வீடுகளில் இருந்து வெளிச்செல்வதற்கு வழங்கப்படும் அனுமதி, ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களுக்கு மட்டுமே ஏற்புடையதாகும் என அறியத் தரப்படுகின்றது.

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் வீடுகளில் இருந்து வெளிச்செல்வதற்கு இது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல.

ஏதேனும் ஒரு பிரதேசம் அல்லது கிராமம் இடர் வலயமாக குறிப்பிடப்பட்டி ருந்தால் அத்தகைய வலயங்களுக்குள்பிரவேசிக்கவோ அல்லது அங்கிருந்து வெளிச் செல்லவோ எவருக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மாவட்டங்களில் உள்ளோர் இவ்வாறு தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தைப் பயன்படுத்தி தமது அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும். ஏனைய மாவட்டங்களில் உள்ளோர் ஊரடங்கு அமுலில் இல்லாத நேரத்தில் தேசிய அடையாள அட்டை நடைமுறையை பின்பற்றவேண்டிய அவசியம் இல்லை - என்றுள்ளது. (ப)



# வாகன விபத்தில் இருவர் காயம்


கொடிகாமம், மே 5

பட்டா ரக வாகனம் வீதியை விட்டு விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர். இந்த விபத்து யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றது. மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றிச் சென்ற வாகனமே விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை· மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

# மக்களுக்கு அச்சம் வேண்டாம் கட்டுப்பாட்டுக்குள் கொழும்பு

கொழும்பு, மே 5



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட கொழும்பின் நிலைமை தற்போது பூரண கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. அது தொடர்பில் வீண் அச்சம் தேவை இல்லை. இவ்வாறு கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி விஷேட மருத்துவ நிபுணர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார். கொழும்பு உட்பட அனைத்துப் பகுதிகளிலும் எதிர்வரும் 11ஆம் திகதி அன்றாட நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அரச, தனியார் நிறுவனங்களின் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பு மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குள் உள்ள தலைநகர் பகுதியில் மட்டும் 124 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆனால் கொரோனா தொற்று பரவலுக்கான குறைந்தபட்ச சாத்தியப்பாடுகளைக் கொண்ட பகுதிகள் என நம்பும் இடங்களை நாம் மூன்று இடங்களுக்குள் மட்டுப்படுத்தியுள்ளோம்.

தற்போது கொழும்பில், நாகல்கம வீதி, பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் நாரஹேன்பிட்டி தாபரே மாவத்தை ஆகிய மூன்று பகுதிகளில் மட்டுமே கொரோனா பரவலுக்கான சாத்தியப்பாடுகள் உள்ளன. அந்தப் பகுதிகளை நாம் தொடர்ந்து தனிமைப்படுத்தி கண்காணித்து வருகின்றோம். அந்த மூன்று பகுதிகளுக்கும் வெளியே தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை. அந்தப் பகுதிகளை அண்மித்துள்ள, அந்தப் பகுதி தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த கொழும்பு மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்கும் அனைவரையும் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத் துள்ளதால் தற்போதைய சூழலில் கொழும்பின் நிலை பூரண கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளிலும், ஏனைய பகுதிகளிலும் இனிமேலும் கொரோனா தொற்று பரவாது என்பதை நூற்றுக்கு நூறு வீதம் உறுதி செய்யும் விதமாக நாம் விசேட இரத்த மாதிரி பரிசோதனைகள் ஊடான ஆய்வொன்றையும் முன்னெடுத்து வருகின்றோம்.

கொழும்பு மாநகர சபை எல்லையில் அதிக கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட பண்டாரநாயக்க மாவத்தை பகுதியில் இதற்கான நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம். என்றார். (ப)

# வெசாக் தினத்தன்று கைதிகள் சிலர் விடுவிக்கப்படுவர்

கொழும்பு, மே 5

குற்றக்கோவை தண்டனைச் சட்டத்துக்குட்பட்ட 33 குற்றச் செயல்களுக்கு புறம்பான குற்றச் செயல்கள் தொடர்பில் தண்டனை அனுபவித்து வரும் 65 வயதுக்கு மேற்பட்ட கைதிகளை விடுதலை செய்வதற்கு சிறைச்சாலைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் வியாழக்கிழமை 7 ஆம் திகதி வெசக் போயா தினத்தன்று இந்தக் கைதிகளை விடுதலை செய்ய இருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் எம்.ஜி.டப்லியூ. தென்னகோன் தெரிவித்தார். அதைத்தவிர பிணை செலுத்த முடியாமல் இருக்கும் சிறு குற்றங்களைப் புரிந்த கைதிகளையும் விடுதலை செய்ய இருப்பதுடன், இன்னும் சில கைதிகளுக்கு மன்னிப்புக்காலம் வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ப)

# நஞ்சற்ற விவசாய உற்பத்திகளை கிழக்கில் ஊக்குவிக்க வேண்டும்

## ஆளுநர் தெரிவிப்பு

மூதூர், மே 5

சௌபாக்கியா திட்டம் ஊடாகப் பல்வேறு நச்சுத்தன்மையற்ற உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

சௌபாக்கியா திட்டத்தின் கீழ் மாகாண விவசாயத் துறையை மேம்படுத்துவதற்காக அண்மையில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் 100 கிலோ உரத்தைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் மூன்று சிறப்பு மாதிரிப் பண்ணைகள் அமைக்கவும் ஆளுநர் அறிவுறுத்தினார். உள்ளூர் பயிர்களைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவிப்பதற்கும், மாகாணத்தின் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கும் நச்சுத்தன்மையற்ற உர வகைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ப-40)

# அதிவேக வீதிக்காக ரூ.3,170 கோடி கடன்

கொழும்பு,மே 5

அதிவேக வீதி அமைப்புப் பணிகளுக்காக 3 ஆயிரத்து 170 கோடி ரூபா கடன் பெறுவதற்கு பெருந்தெருக்கள் அமைச்சுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன் இதற்காகப் பெறப்படவுள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய தொகையொன்றுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை சிக்கலுக்குரியது என்று முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

கொவிட் 19 நிலமையால் பாதிக்கப்பட்டுள்ள 17 இலட்சம் பேருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு 850 கோடி ரூபாவே செலவாகின்றது. அப்பாவி மக்களுக்கு வழங்கப்படுகின்ற அந்தத் தொகையை விட நான்கு மடங்கு தொகையை அதிவேக வீதி ஒப்பந்தத்துக்கு திடீரென வழங்க முயற்சிக்கின்றனர். இது மிகப் பெரிய டீல். நாடாளுமன்றம் இருந்திருந்தால் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டிருக்கும். நாடாளுமன்றத்தை மூடிவைத்து இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். என்றார். இதே வேளை, ஜனாதிபதி வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்றார். அதிவேக வீதி தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஊடகங்களுக்குத் தெளிவூட்ட வேண்டும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (க)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## யதார்த்தத்தை உணருங்கள்!

எப்படியாவது மீண்டும் இயல்பு வாழ்வு திரும்பிவிட்டது போன்ற மாயையை உருவாக்க அரசு படாதபாடுபடுகின்றது.ஊரடங்கை மெல்ல மெல்லத் தளர்த்தி, மே11 இல் இருந்து நாட்டின் சகல பகுதிகளிலும் அதனை முற்றாக நீக்கவும் அரசு முடிவெடுத்துவிட்டது. அரச, தனியார் துறைகளை வழமை போல இயங்கச் செய்யுமாறும் கட்டளைகள் பறந்துள்ளன.

ஆனால் பாவம், காலில் கயிற்றைக் கட்டிவிட்டு, வானளாவத் துள்ளிக் குதிக்கச் சொன்னால் என்னதான் செய்வார்கள் அரச திணைக்களத் தலைவர்கள்.ஒரு பக்கம் முன்னரைப் போல சேவைகளை வழங்கச் சொல்லும் அரசாங்கம் சுகாதார நடைமுறைகளையும் கண்டிப்பாகப் பேணுமாறும் உத்தரவிட்டுள்ளது. சுகாதார நடைமுறைகளில் தனியாள் இடைவெளி பேணல், கைகளைச் சுத்தம் செய்தல், முகக் கவசம் அணிதல் என்பனவே முக்கியமானவையாக அறிவுறுத்தப்படுகின்றன. ஆனால் இவற்றை மேற்கொள்வதற்கு பல்வேறு நடைமுறைச் சிக்கல்களை திணைக்களத் தலைவர்கள் எதிர்கொள்கின்றனர். கைகளைச் சுத்தம் செய்வதற்குரிய, சுத்தமாக்கித் திரவம் எந்தக் கடையிலும் இப்போது இல்லை. எங்காவது ஒன்றிரண்டை வாங்கினாலும் அது எத்தனை நாளுக்குப் போதும்? முகக்கவசங்களின் கதையும்அதேதான்.அதிகவிலையில்தான்முகக்கவசங்களைப் பெறமுடிகின்றது. தன் நிறுவனப் பணியாளர்களுக்கு குறித்த திணைக்களத் தலைவர்களே முகக்கவசங்களை அணிவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவற்றைக் கொள்வனவு செய்வதற்குரிய நிதி கையில் இல்லை, அதற்கானஅனுமதியும்எந்தவொருதிணைக்களத்துக்கும் கிடைக்கவுமில்லை.

அதைவிட, தனியாள் இடைவெளி பேணுதல் என்பதும் ஆகாத காரியம்.பெரும்பாலான அலுவலங்கள் குறுகலான கட்டடங்களிலேயே அமைக்கப்பட்டுள்ளன. அங்கு தனியாள் இடைவெளி பேண வேண்டுமென்றால், இப்போதுள்ளவற்றைப் போல இரண்டு, மூன்று மடங்கு பெரியளவிலான கட்டடங்கள் தேவை. அதுவும் இப்போதைக்குச் சாத்தியமில்லை. அப்படியானால் பணிக்குழாமில் மூன்றிலொரு பங்கினரை மாத்திரம் தேர்வு செய்து நிறுவனங்களை இயங்கச் செய்யலாமே என்றும் கேள்வி எழலாம். அப்படி மூன்றிலொரு பங்கினரைக் கொண்டு அத்தியாவசிய, அவசரமான கருமங்களையே செய்யமுடியும். அரசு சொல்வதைப் போல வழமையான, இயல்பு நிலையிலான காரியங்களை நிறுவனங்கள் ஆற்றமுடியாது. இப்போது இயங்கும் பல அரச அலுவலங்களில் இப்படிக் கைகளைச் சுத்தம் செய்யும் நடைமுறை, தனியாள் இடைவெளி என்பன பேணப்படுவதில்லை எனவும் சொல்லப்படுகின்றது.

அதைவிட , அலுவலர்களின் வருகையை உறுதிப்படுத்த, விரல் பதிவு இயந்திரங்களைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்று வடமாகாண ஆளுநரின் செயலர் அனுப்பியுள்ள வழிகாட்டுநெறி தொடர்பான கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் பரவும் வழிகளில் தொடுகையே மிக முக்கியமானது. அதுவும், கொரோனாத் தொற்றுள்ள ஒருவர் இந்த விரல் பதிவு இயந்திரத்தில் தன் வருகையைப் பதிவு செய்துவிட்டுச் சென்ற பின்னர் அதில் தமது கைவிரலைப் பதிக்கும் பலரும் கொரோனாவால் பாதிக்கப்படும் அபாயமுண்டு. இந்த விபரீதம் வேண்டாம் என்றுதான் சீனா, பிரான்ஸ், இத்தாலி ,அமெரிக்கா போன்ற நாடுகளில் விரல் பதிவு இயந்திர நடைமுறைக்கு தற்காலிகமாகக் கும்பிடு போட்டுவிட்டு, பழையபடி வருகைப் பதிவேடுகளைக் கையில் எடுத்துவிட்டார்கள். ஆனால் நாமோ அதிபுத்திசாலித்தனமாக எவற்றையெல்லாம், செய்யமுடியாதோ அவற்றைத்தான் செய்ய வேண்டும் என அடம்பிடிப்பதோடு, கொரோனா பரவும் வகையிலான நடவடிக்கைகளையே அதிகமாக ஊக்குவிக்கவும் செய்கிறோம். அதற்கு இந்த விரல் பதிவு இயந்திர நடைமுறை நல்லதொரு உதாரணம்.

அவசரத்தனமாக இயல்பு வாழ்வு மீண்டு விட்டதைப் போலக் காட்ட முனையும் அரசாங்கம், கொஞ்சமேனும் அதற்கான வழிவகைகளையும் செய்துகொடுத்தால் ஏதும் குறைந்து போய்விடாது. அத்தோடு திணைக்களத் தலைவர்களும் அரசு சொல்வதை அப்படியே 'ஆமாம் சாமி" போட்டு ஆமோதிக்காமல், நடைமுறைச் சிக்கல்களை விளக்கி, பொருத்தமான, பாதுகாப்பான வழிகாட்டல்களைச் செய்யவேண்டும். ஆனால் அதெல்லாம் நடக்கிற காரியமா?

# சட்டத்துக்கு அமைய தேர்தல் நடத்தலாம்!

## சட்டமா திணைக்களம் தெரிவிப்பு

**கொழும்பு, மே 5**

**இலங்கையிலுள்ள சட்டத்துக்கு அமையவே நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது ஏற்புடையது என சட்டமா அதிபர் திணைக்களம்தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளது.**

மார்ச்19ஆம்திகதிமுடிவடைந்த நாடாளுமன்றத்தேர்தல்வேட்பு மனுக்காலத்தில் விசேட பொது விடுமுறைஅறிவிக்கப்பட்டமையால்அதன்தாக்கங்கள்தொடர்பாக ஆணைக் குழு ஒரு கருத்தைக் கோரியிருந்தது.

பொதுத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் கடந்த மார்ச் 12ஆம் திகதி வியாழக்கிழமை முதல்மார்ச்19 ஆம்திகதிவியாழக்கிழமைவரைஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. 12 மற்றும் 13 வியாழன், வெள்ளிக்கிழமைகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன.

14 மற்றும் 15 ஆம் திகதிகள் சனி, ஞாயிறு விடுமுறை நாள்கள். எனினும் கொரோனா நெருக்கடி ஆரம்பமானதால் 16ஆம் திகதி திங்கட்கிழமையன்று பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் 17, 18 மற்றும் 19ஆம் திகதிகளில் செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் வேட்புமனுக்கள்ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், குறித்த தினங்களை பொதுவிடுமுறை தினமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் வர்த்தகமானிமூலம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்பது இப்போதுதான் தங்களுக்குத் தெரியவந்திருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

சட்டப்படி வேட்புமனுக்கள் தாக்கலுக்கு வழங்கப்பட்ட நாள்களில் நான்கு நாள்கள் அதுவும் கடைசி நான்கு தினங்களும் பொதுவிடுமுறைகளாகும். அத்தகையபொதுவிடுமுறைதினத்தில்ஏற்றுக்கொள்ளப்பட்டவேட்புமனுக்கள்சட்டரீதியானவையா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து ஆணைக்குழு சட்டமா திணைக்களத்திடம்சட்டவியாக்கியானங்களை கோரியிருந்தார். நாட்டின் சட்டத்துக்கு அமைய நாடாளுமன்றத் தேர்தலைநடத்தலாம்என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (எ-22)

# பி.சி.ஆர்சோதனையைஅதிகரிக்க முன்னாள்எம்.பிக்களின்சம்பளம்

## பிரதமரின் நேற்றைய கூட்டத்தில் யோசனை

பிசிஆர் பரிசோதனைகளின் அளவை அதிகரிப்பதுதொடர்பாகஅரசுகவனம்செலுத்தவேண்டும் என்று சுட்டிக்காட்டிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு தமது ஒரு மாத ஓய்வூதியத்தை அன்பளிப்பாக வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளனர். இவ்வாறு பிரதமர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வெளிநாட்டு உதவிகள் கிடைப்பது மற்றும் அவற்றை செலவிடுவது தொடர்பாக எதிர்க்கட்சியினரால் பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதால், அதுதொடர்பாகமுறையான தெளிவுபடுத்தல் அவசியமாகும் என்று முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டார்.

வெளிநாட்டு உதவிகள் தொடர்பான சரியான தகவல்களைத்தெரிவிக்கும்ஆற்றல்நிதியமைச்சின் செயலாளருக்கே உள்ளதாகத் தெரிவித்த பிரதமர் இது தொடர்பாக கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை நிதியமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆடிகலவுக்கு வழங்கினார்.

உலகவங்கிதற்போதையநிலைமைகாரணமாக 127 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை வழங்க இணங்கி, அதற்கு ஏற்புடைய ஒப்பந்தங்கள்கைச்சாத்திடப்பட்டுள்ளபோதிலும், இதுவரை அந்த நிதி நாட்டுக்கு கிடைக்கவில்லை எனவும், ஏற்புடைய நிதி எதிர்காலத்தில் கிடைக்கவுள்ளது எனவும் இதன்போதுநிதியமைச்சின்செயலாளர் குறிப்பிட்டார். சுகாதார அமைச்சு மற்றும் கொரோனா தொடர்பான செலவினங்களை ஈடு செய்வதற்கு அந்த நிதி கிடைப்பதாகவும், இதற்கு மேலதிகமாகபொருள்ரீதியானவெளிநாட்டுஉதவிகள் சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழில்களுக்காக கொழும்புக்கு வந்து, கொரோனா வைரஸ் நிலைமை காரணமாக வீடுகளுக்கு செல்ல முடியாமல் தங்குமிடங்களில் சிக்கியுள்ளவடக்கு, கிழக்கு மக்கள் வீடுகளுக்குச் செல்வதற்காகமுறையானவேலைத்திட்டமொன்றைத் தயாரித்து வழங்குமாறு இதில் கலந்துக் கொண்டவடக்கு, கிழக்கைப்பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், வடக்குகிழக்கில்வாழும்பெரும்பாலானோர் நாளாந்த வருமானத்தைப் பெறுவோர் என்பதால், அவர்களுக்குஅரசால்வழங்கப்படும் நிவாரணப் பணத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்தனர், என்றுள்ளது. (ஒ,5)

## வீதியோரம் இருந்து கைக் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியிலிருந்து கைக்குண்டு ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் அடிப்படையிலேயே யாழ்ப்பாணம் கொக்குவில் ஆடியபாதம் வீதியோரமாக இருந்துஇந்தக்கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ப-114)

# அரச சொத்துக்கள் தாராளமாக மோசடி

## கொரோனா தடுப்புப் பெயரால் அரங்கேற்றம் என்கிறார் அத்தநாயக்க

**கொழும்பு, மே 5**

**வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக செயலணி அமைத்துள்ளதாகக் குறிப்பிட்டு அரச சொத்துக்களை தமது தனிப்பட்ட சொத்துப்போல் பயன்படுத்தும் மோசடியான செயற்பாடுகளில் அரசு ஈடுபட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். அரசமைப்பை மீறாத ஜனநாயக ஆட்சியை முன்னெடுக்குமாறும் அவர் அரசிடம் கோரிக்கை விடுத்தார்.**



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட் 19 வைரஸ் பரவலால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காலகட்டத்தில் மக்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுக்காமல் விலை அதிகரிப்பை மேற்கொள்வதால் மக்களுக்கே பெரும் நெருக்கடி ஏற்படும்.

வைரஸ் பரவலால் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தனியார் துறை மற்றும் அரச நிர்வாக துறையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கொவிட் 19 வைரஸ் பரவலுக்கு பின்னர் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசிடம் முறையான செயற்பாடுகள் ஏதாவது காணப்படுகின்றனவா? இந்த விடயம் தொடர்பில் சிந்தனை செய்யாமல், நிதி தொடர்பிலான முகாமைத்துவத்தை தமது சகோதரரின் கையில் ஒப்படைத்துவிட்டு நிதி மோசடியில் ஈடுப்பட்டு வருகின்றனர்.

அரச சொத்தை தமது சொத்தாகப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொண்டு முறையான ஆட்சியை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளை அரசு மேற்கொள்ள வேண்டும். ஆட்சிப் பலத்தை தக்கவைத்துக் கொள்வது தொடர்பில் சிந்தனை செய்யாது மக்களின் நலன் கருதிய ஆட்சியை முன்னெடுங்கள். என்றார். (த)

# இணையக் காணொலியில் சிறாருடன் பேசிய பிரதமர்

கொழும்பு, மே 5

நாட்டின் நிலைமை மற்றும் தமது ஆதங்கங்களை நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சிறுவர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இணையக் காணொலி மூலமாகத் தெரிவித்தனர்.

அவர்களின் கேள்விகள் அனைத்துக்கும் பிரதமர் பதில் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ளவர்களின் பிள்ளைகளும், பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருப்பதால் வீடுகளில் கற்கைகளை முன்னெடுக்கும் மாணவர்களும் எனப் பலர் தமது நிலைமைகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் இணையக் காணொலி மூலமாகத் தெரிவித்தனர், கேள்விகள் கேட்டனர். மாணவர்களின் கேள்விகளுக்கு நேரடியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதில் தெரிவித்தார். இதில் அவர் சிங்கள தமிழ் மொழிகளில் மாணவர்களின் கேள்விகளுக்கு ஏற்ப பதில் தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது தந்தை எப்போது வீடு திரும்புவார்? எமது கல்வியைத் தொடர எப்போது பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்?, இந்த முறை வெசாக் தினத்தில் நாம் வெசாக் அலங்காரக் கூடுகளை தயாரிக்க அனுமதி வழங்குவீர்களா? நாட்டின் சுகாதார நிலைமை எவ்வாறு உள்ளது? எனப் பல கேள்விகளை மாணவர்கள் பிரதமரிடம் கேட்டனர்.

இதற்கெல்லாம் பதில் தெரிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி தாத்தாவும் நாமும் எமது மழலைச் செல்வங்களின் கருத்துக்களை செவிமடுக்கின்றோம். நாட்டின் நிலைமைகளை வெகுவிரைவில் சரிசெய்து நீங்கள் அனைவரும் உங்கள் தாத்தா, பாட்டி,நண்பர்கள், ஏனைய உறவினர்களைச் சந்திக்க அவர்களுடன் வீடுகளுக்கு செல்லக்கூடிய வாய்ப்பை உருவாக்கிக் கொடுப்போம். கொழும்பில் சிக்கியுள்ள உங்களின் தந்தை வெகு சீக்கிரம் வீடு திரும்புவார். உங்கள் நாட்டின் நன்மையைக் கருதியே உங்களின் தந்தை கொழும்பில் உள்ளார். அவரை வெகு சீக்கிரம் உங்களுடன் சேர்ப்போம். அதற்காகவே ஜனாதிபதி பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். வெசாக் கூடுகளை உருவாக்கி வீட்டைச் சுற்றி தொங்கவிடுங்கள். மகளே! உங்களின் ஆதங்கங்கள் எமக்கு நன்றாக தெரிகின்றன. உங்களின் பாதுகாப்பே எமக்கு முக்கியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# பாடசாலைகளை மீள ஆரம்பிக்க சுகாதார ஆலோசனை அவசியம்

*இலங்கை ஆசிரிய சங்கம் வலியுறுத்துகின்றது*

கொழும்பு, மே 5

பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து கல்வித் துறை சார் அதிகாரிகள் தீர்மானிக்க முடியாது. சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளைப் பெற்று அதற்கேற்பவே தீர்மானங்களை எடுக்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமத்திய மாகாண பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்து மாகாண ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது. இதன் போது வடமத்திய மாகாண பாடசாலைகளை ஆரம்பிக்க முடியும் என்று ஆளுநர் தெரிவித்திருக்கிறார்.

அதற்கமைய சில ஆலோசனைகளுடன் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் 100க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை ஆரம்பித்தல் உள்ளிட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான பொறுப்பு ஆசிரியர்களிடத்திலும் பாடசாலை அபிவிருத்திக் குழுவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

பாடசாலைகளை ஆரம்பிக்கலாம் என்று கூறப்படும் வடமத்திய மாகாணத்திலும் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோர் இனங்காணப்பட்டுள்ளனர். சில கிராமங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமையில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றமை அச்சுறுத்தலானது.

பாடசாலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. ஆனால் இது தொடர்பில் தீர்மானிக்க வேண்டியது கல்வித்துறைசார் அதிகாரிகள் அல்ல.

சுகாதாரத்துறையினருடன் கலந்தாலோசித்து அதற்கமையவே பாடசாலைகளை ஆரம்பிப்பது குறித்துத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்.

எனவே பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கு சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளைப் பெறுமாறு நாம் வலியுறுத்துகின்றோம். சுகாதார ஆலோசனைகள் இன்றி பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுதல் அச்சுறுத்தலானது என்பதை மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்-என்றார். (த)

# நாடு திரும்பும் இலங்கையரை தனிமைப்படுத்த ஹொட்டல்கள்

*நாளாந்தக் கட்டணம் 7,500 ரூபா*

கொழும்பு, மே 5

வெளிநாட்டிலிருந்து நாட்டுக்குத் திரும்பிவரும் இலங்கையர்களை தேர்ந்தெடுக்கப்பட்ட ஹொட்டல்களில் குறைந்தளவு கட்டணம் செலுத்தி தனிமைப்படுத்தும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய ஹொட்டல்களில் தனிமைப்படுத்தலிலுள்ள ஒவ்வொருவரிடமிருந்தும் நாளாந்தம் 7,500 ரூபா அறவிடப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குத் திரும்பும் இலங்கையர்களின் கோரிக்கைகளைப் பரிசீலித்த பின்னர் ஹொட்டல்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று தொடக்கம் இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து பல இலங்கையர்களை அழைத்துக்கொண்டு சிறப்பு விமானங்கள் இலங்கை வரவுள்ளன. முதல் விமானம் இன்று 260 பயணிகளுட்ன் இங்கிலாந்திலிருந்து வருகை தரவுள்ளது. அவர்கள் அனைவரும் கட்டாயம் தனிமைப்படுத்தப்பட வேண்டும். இத்தகையவர்களுக்கே மேற்குறித்த கட்டணத்தில் ஹொட்டல்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

'ஜெட்விங் ப்ளூ, சிட்ரஸ் வஸ்கடுவ, ஆகிய ஹொட்டல்கள் முதற்கட்டமாக தனிமைப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன என்று இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (த)

# திறக்கப்பட்டது மெனிங் சந்தை

கொழும்பு, மே 5

நாடு முழுவதும் கொரேணா வைரஸ் பரவிவரும் நிலையில் கிருமித் தொற்று நீக்கம் செய்வதற்காக மூடப்பட்டிருந்த கொழும்பு மெனிங் சந்தை நேற்று மீளத் திறக்கப்பட்டுள்ளது.

வியாபாரிகளும், நுகர்வோரும் தகுந்த சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுமாறு மெனிங் பொது வர்த்தக சங்கத்தின் பிரதித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)

# மே 11 முதல் வழமையான செயற்பாடுகள் நிறுவனங்களுக்கு நடைமுறை அறிவிப்பு

## பாடசாலைகளை மீள ஆரம்பிக்கமுடியாத சூழல்!

கொழும்பு, மே 5

தொற்றுநோய் அச்சுறுத்தல் மற்றும் நாடு முகங்கொடுத்துள்ள நிலைமையை நோக்கும்போது, பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான சூழல் ஏற்படவில்லை என்று கல்வியமைச்சின் செயலாளருக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க அறிவித்துள்ளார்.

எனினும், மே மாதம் 11 ஆம் திகதி தொடக்கம் நாட்டில் வழமையான செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பிலான வழிமுறைகள் பற்றிய அறிவித்தல் கல்வி அமைச்சு உட்பட ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.



முன்னதாக எதிர்வரும் 11 ஆம் திகதி நாட்டிலுள்ள பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# நிறுவனங்களை திறப்பவர்கள் சுகாதாரத்தில் கவனம்

கொழும்பு, மே 5

சுதந்திர வர்த்தக வலயத்துக்குச் சொந்தமான கைத்தொழில்கள், பிற தொழிற்சாலைகள் சேவை நடவடிக்கையை ஆரம்பிக்கும்போது சுகாதார, பாதுகாப்புத் துறையினரின் பரிந்துரைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். மேற்பார்வை நடவடிக்கைகள் முதலீட்டுச் சபைக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளன என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

நாடு முழுவதும் 254 கைத்தொழிற்சாலைகள் தொழில் நடவடிக்கைகள் மீள ஆரம்பித்துள்ளன. 6ஆயிரத்து 230 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்துக்கு உட்பட்ட 62 தொழிற்சாலைகள் கடந்த புதன்கிழமை 6ஆயிரத்து 695 ஊழியர்களுடன் மீள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'பியகம' சுதந்திர வர்த்தக வலயத்துக்குச் சொந்தமான 52 தொழிற்சாலைகள் 9ஆயிரத்து 31 அலுவலர்களுடனும், வடக்கு, கிழக்கில் உள்ள 25 தொழிற்சாலைகள் 7ஆயிரத்து 292 சேவையாளர்களுடனும் தொழில் நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது மட்டுப்படுத்தப்பட்டுள்ள தொழிற்றுறை சேவை நடவடிக்கைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் வழமைக்கு திரும்பும். - என்றார். (த)

# நாட்டை மயானமாக்கவுள்ள அரசுக்கு ஒத்துழைக்காதீர்

## சம்பிக்க ரணவக்க கோரிக்கை



**கொழும்பு, மே 5**

**"அவசரமாகத் தேர்தலை நடத்துவதற்கு முயற்சித்து நாட்டை மயானமாக்குவதற்கே அரசு முயற்சிக்கின்றது. இத்தகைய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம்" என்று மக்களிடமும் தேர்தல்கள் ஆணைக்குழுவிடமும் கோரிக்கை விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு தேர்தலை வெற்றிகொள்ளும் நோக்கத்தில் உண்மைத் தகவல்களை மறைக்க முயற்சிக்கின்றது. இராணுவத்தினர் பலருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமைக்குக் காரணம், சுகாதாரப் பிரிவினரின் செயற்பாடுகளை இராணுவத்தினரைக் கொண்டு நிறைவேற்றியமை தான்.

கொவிட் 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு அரசு முறையான செயற்பாடுகள் எதனையுமே மேற்கொள்ளவில்லை. வைரஸ் பரவல் தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்திருந்தபோதும், நாட்டுக்குள் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. பெப்ரவரி இறுதிப் பகுதியில் அல்லது மார்ச் முதலாம் திகதிக்கு முன்பாக நாட்டை மூடியிருந்தால் ஒருவர்கூட நோய்த் தொற்றுக்குள்ளாகியிருக்க மாட்டார்கள். ஒருவர்கூட நோய்த் தொற்றுக்குள்ளாகாத 17 நாடுகள் காணப்படுகின்றன. எமது நாட்டையும் இவ்வாறு பாதுகாக்க முடிந்திருக்கும். ஒரு தீவு என்ற வகையில் அந்தச் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்ள முடிந்திருக்கும். விமான நிலையங்களை மாத்திரமே நாம் மூடவேண்டியிருந்தது. அதனையும் செய்யவில்லை.

கொரோனா நெருக்கடியின் மத்தியில் தேர்தலைப் பற்றியும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பற்றியும் கனவு கண்டுகொண்டிருந்தனர். பொதுவாக 48 நாள்கள் தொடர்ச்சியாக நாட்டை முடக்கிவைத்திருந்தால் வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரமுடியும் என்று பல நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணமும் புத்தளம் மாவட்டமும் 54 நாள்களாக முடக்கப்பட்டுள்ள போதிலும் வைரஸ் பரவல் இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவில்லை. ஊரடங்கு நடைமுறையில் இருந்த காலத்தில் கொரோனா பரவல் அதிகரித்து வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. அப்படியென்றால் ஊரடங்கு நடைமுறையிலிருந்த காலப்பகுதியில் ஏதோ சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 11 ஆம் திகதி ஊரடங்கைத் தளர்த்த முடியும் என்று அரசு அறிவித்துள்ளது.

தற்போது ஜூன் மாதம் 20 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கே முயற்சிக்கின்றனர். அதற்கமையவே மே 11 ஆம் திகதி ஊரடங்கைத் தளர்த்த முடியும் என்று தெரிவித்துள்ளனர். மீண்டும் நெருக்கடி நிலைமையை அதிகரிப்பதற்காகவா அரசு இவ்வாறான முயற்சியை மேற்கொள்ளவுள்ளது?- என்றார். (த)

# சமூகவலைத்தள செயற்பாட்டாளர்களை விடுதலை செய்யவும்

*சுதந்திர ஊடக இயக்கம் கோரிக்கை*

கொழும்பு, மே 5

தற்போதைய நெருக்கடி நிலையில் ஊடகங்களும் மக்களுக்கு நேர்மையாகச் செயற்படும் அறிவுத்திறனுடைய சமூகவலைத்தள செயற்பாட்டாளர்களும் மிக அவசியம் என்று சுட்டிக்காட்டியிருக்கும் சுதந்திர ஊடக இயக்கம், இதுவரையில் கைது செய்யப்பட்ட சமூகவலைத்தள செயற்பாட்டாளர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தையொட்டி (மே 3) சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

உலகளாவிய ரீதியில் கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவிவரும் நிலையில், பெரும்பான்மையான உலகநாடுகள் ஜனநாயகத்தை விடுத்து அதிகாரத்தாலேயே அடக்கப்படுகின்றன. ஒரு அவசரநிலை அறிவிப்பு செய்யப்பட்டிருக்கும் இந்தச் சூழலில், அரசுகள் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்துச் செயற்படுவதைக் காட்டிலும், அதிகாரத்தை மையப்படுத்தியே செயற்படுகின்றன. இத்தகைய போக்கு தற்போது முன்னணியில் நின்று பணியாற்றும் ஊடகத்துறைக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட உலக நாடுகளில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகள் மற்றும் அதில் சுகாதாரப் பிரிவின் வகிபாகம் என்பன தொடர்பில் விரிவான கலந்துரையாடல் மற்றும் வாதப் பிரதிவாதங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும், அத்தகைய கருத்தாடல்களுக்கு இலங்கை அரசு மேற்கொள்ளும் சில தீர்மானங்கள் இடையூறாக அமைந்துள்ளன. இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கும் கடிதமொன்றை அனுப்பியுள்ளது - என்றுள்ளது. (த)

# எரிபொருள் மானியம் அரசு வழங்கவேண்டும்

*தனியார் பேருந்து சங்கம் கோரிக்கை*

கொழும்பு, மே 5

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்குமாறு அரசிடம் கோரிக்கை வித்துள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

தனியார் பேருந்துப் பிரயாணத்தின்போது சுகாதாரத் துறையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு விதிமுறைகளில் குறிப்பாக சமூக இடைவெளி நிச்சயமாகப் பேணப்படும்.

ஆனால் அரசு அல்லது அமைச்சர் கூறுவதைப் போன்று பிரயாணங்களைக் குறைப்பது சாத்தியமற்றது. எனவேதான் எரிபொருள் மானியம் வழங்குமாறு கோருகின்றோம்.

இலாபத்தைப் பெற்றுக்கொள்ள நாம் எதிர்பார்க்கவில்லை- என்றார். (த)

# போராட்டத்துக்கென அமைத்த கூடாரத்தைக் காணவில்லை

## பொலிஸில் முறைப்பாடு

திருகோணமலை, மே 5

திருகோணமலையில், கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாக சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கென்று அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தைக் காணவில்லை என்று கையளிக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் சங்கம், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

இந்த அமைப்பின் தலைவி நாகேந்திரன் ஆசா திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக போராட்டம் இடத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இந்தநிலைமையில் அது திருடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# 58 லீற்றர் கசிப்புடன் ஐந்து பேர் கைது



கிளிநொச்சி, மே 5

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் நடத்திய சுற்றிவளைப்பில் கசிப்புக் காய்ச்சினரென்ற குற்றச்சாட்டில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இராமநாதபுரம், அழகாபுரி, பிரமந்தனாறு, கல்லாறு பகுதிகளில் சட்டவிரோத கசிப்பு விற்பனையிலும் கசிப்பு உற்பத்தியிலும் ஈடுபட்டவர்களே கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 58லீற்றர் கசிப்பு, 218 லீற்றர் கோடா என்ன மீட்கப்பட்டுள்ளன. கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தருமபுரம் குற்றத்தடுப் புப் பிரிவுப் பொலிஸ் பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்துள்ளார். (த-113)

# 187 பேர் குணமடைவு; 524 பேர் சிகிச்சையில்

கொழும்பு, மே 5

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 03 பேர் நேற்றுக் குணடைந்துள்ளனர். அதற்கமைய கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்து வீடு சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை 187ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 719 பேரில் தற்போது 525நோயாளிகள் 7 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் 117 பேரும், வெலிகந்தை ஆதார வைத்தியசாலையில் 54 பேரும், முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் 81 பேரும், இரணவில வைத்தியசாலையில் 17 பேரும், காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் 59 பேரும், வெலிசறையிலுள்ள கடற்படை வைத்தியசாலையில் 136 பேரும், ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் 60 பேரும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மேலும் 26 வைத்தியசாலைகளில் 137 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (அ, 22)

# மக்களுக்கு நன்மையெனில் மஹிந்தவைச் சந்திக்கலாம்

## கூட்டமைப்பு பங்கேற்றது பற்றி சிறிகாந்தா கருத்து

யாழ்ப்பாணம், மே 5

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று (நேற்று) நடைபெற்ற பிரதமரின் கூட்டத்தில் கலந்துகொண்டதன் மூலமாக மக்களுக்கு ஒன்று அல்லது இரண்டு நன்மைகளாவது கிடைக்குமானால் அது வரவேற்கத்தக்கது" என்று தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் கூட்டியுள்ள கூட்டத்துக்கு போவதா விடுவதா என்பது சம்பந்தப்பட்ட கட்சிகளைப் பொறுத்தது. அந்த வகையிலே எங்களுடைய கட்சியும் அங்கம் வகிக்கின்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளார் என்பதும், இந்த முடிவு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நிலைப்பாடு என்பதும் நான் சொல்ல வேண்டிய விடயங்கள்.

ஆனால், கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்வதையிட்டுசாதகமாகவோ பாதகமாகவோ நான் கருத்துத் தெரிவிக்கவிரும்பவில்லை. அது அவர்களுக்குரிய விவகாரம், அவர்களைப் பொறுத்தது. அவர்கள் கலந்துகொள்வதன் ஊடாக ஏதாவது ஒன்று அல்லது இரண்டு நன்மைகளாவது அவர்களால் மக்களுக்குக்கிடைக்குமென்றால் அது வரவேற்கத்தக்க விடயம். அதை நாங்கள் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஆனால் கொள்கையளவில், நாடாளுமன்றைக் கூட்டுங்கள். கலைக்கப்பட்ட நாடாளுமன்றைக் கூட்டுவதற்குரிய காரணங்கள் வலுவாக இருக்கின்றன. நாட்டில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இந்தப் பின்னணியில்தான் பிரதமருடைய கூட்டம் நடைபெற்றது. அரசியல் சர்ச்சைகளுக்கு இது நேரமல்ல. என்றார். (த20)

## மகிந்தவை....

07, விஜேராம மாவத்தையிலுள்ள மஹிந்தவின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அவருடன் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ச, அந்தக் கட்சியின் தவிசாளர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் பல அனுகூலமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன என்று இலங்கைத் தமிழரசுக் கட்சீன் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தனுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கி.துரைரெட்ணசிங்கம், ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன் மற்றும் கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பில் சமகால நிலைமைகள் தொடர்பில் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அலரி மாளிகையில் நேற்றுக் காலை பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையை அதன் தலைவர் இரா.சம்பந்தன், பிரதமரிடம் நேரில் கையளித்தார். அதன்போது பிரதமரைக் கூட்டமைப்பினர் தனியாகச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தர வேண்டும் என்று சம்பந்தன் கேட்டிருந்தார். நேற்று மாலை 5.30 மணிக்கு விஜேராம மாவத்தையிலுள்ள தனது இல்லத்துக்கு வருமாறு மஹிந்த அழைப்பு விடுத்திருந்தார். அதற்கமைய நேற்று மாலை மஹிந்தவை கூட்டமைப்பினர் நேரில் சந்தித்துப் பேசியுள்ளனர்.

### காணி விடுவிப்பு

"கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளம் பிரதேசத்தில் 300 ஏக்கர் காணியும், ஜெயபுரம் பகுதிகளில் 200 ஏக்கர் நிலமும் வனப்பாதுகாப்பு திணைக்களம் தன்வசப்படுத்தி வைத்துள்ளனர். இந்த நிலங்களை விடுதலை செய்தால் மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு சாதகமாக அமையும் அதனைக் கவனத்தில்கொள்ள வேண்டும்" என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இது குறித்து உடனடியாகக் கவனம் செலுத்துவதாகவும், அந்த நிலங்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும், வனப்பாதுகாப்பு அதிகாரிகளுடன் இந்த விடயம் குறித்துப் பேசுவதாகவும் பிரதமர் மஹிந்த இதன்போது வாக்குறுதியளித்தார்.

### நிதி விடுவிப்பு

"உள்ளூராட்சி சபைகளின் நிதியை அவசர நிவாரணத்துக்கு வழங்க அரசு அனுமதிக்கவில்லை. குறைந்தபட்சம் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக, அந்த நிதியிலிருந்து வீட்டுத் தோட்டம், விவசாயத்தை ஊக்குவிக்கும் செயற்பாடுகளுக்குப் பிரதேச சபை நிதி செலவிட அனுமதிக்க வேண்டும்" என்று கூட்டமைப்பின் முன்னாள் எம்.பிக்கள் வலியுறுத்தினர்.

"உள்ளூராட்சி சபை நிதியை விடுவித்து நிவாரண நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதிக்கவில்லை. எனினும், உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டங்களுக்கு நிதி செலவிட ஆளுநர்கள் அனுமதி வழங்கலாம். இது தொடர்பில் உரிய பணிப்புரையை வடக்கு, கிழக்கு ஆளுநர்களுக்கு வழங்குவேன்" என்று இதன்போது பிரதமர் மஹிந்த உறுதியளித்தார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கிலுள்ள 8 மாவட்டங்களில் நடக்கும் விடயங்கள் அந்தந்த மாவட்ட செயலாளர்களால் மக்கள் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்படுவதில்லை. மாவட்ட செயலக கலந்துரையாடல்களுக்கு பிரதேச சபை தவிசாளர்கள் அழைக்கப்படுவதில்லை. இதற்கு முறையான பொறிமுறை அமைக்கப்பட வேண்டும் என்றும் கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

இந்த விடயத்தை மாவட்ட செயலாளர்களின் கவனத்துக்கொண்டு வந்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வோம் என்று பிரதமர் மஹிந்த இதன்போது உறுதியளித்தார்.

### மாதாந்தம் 10,000

"கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் வாழ்வாதாரங்களை இழந்த மக்களில் ஒரு பகுதியினருக்கு அரசு நிவாரணங்களை வழங்கி வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ் அன்றாட உழைப்பாளர்கள் அனைத்து தரப்பினரையும் அரசு உள்ளடக்க வேண்டும். பூசகர்கள், நாதஸ்வர கலைஞர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள் உள்ளிட்டவர்களையும் இணைக்க வேண்டும். அனைத்துக் குடும்பங்களுக்கும் மாதாந்தக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவுடன் மேலதிகமாக 5 ஆயிரம் ரூபா சேர்த்து 10 ஆயிரம் ரூபாவாக வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கொரோனா இடர் முடிவடையும் வரை இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். அத்துடன், கடற்றொழிலாளர்களால் பிடிக்கப்படும் மீன் மற்றும் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் அரசு கொள்வனவு செய்ய வேண்டும்" என்று இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் கவனம் செலுத்துகின்றோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்சவும், பஸில் ராஜபக்சவும் உறுதியளித்தனர். (எ22)

## புதிய...

தெரிவித்தார்.

கொழும்பு 07, விஜேராம மாவத்தையிலுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், "நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீளக் கூட்டப்படுவதையே நாம் விரும்புகின்றோம். இது தொடர்பில் அரசு உடன் கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த அரசின் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டத்தின் கீழ், பயனாளிகள் வீடுகள் கட்டியும் நிதி விடுவிக்கப்படாமலுள்ளது. இது தொடர்பிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

அதேவேளை, புதிய அரசமைப்பு விவகாரம் தொடர்ந்து நகர்த்தப்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இதன்போது, "நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. அதன்பின்னர் அமையவுள்ள புதிய நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு தொடர்பில் இரு தரப்பும் உட்கார்ந்து பேசுவோம்" என்று முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பதிலளித்தார். (எ22)

## கொரோனா...

கடற்படை முகாமில் இருந்து விடு முறையில் சென்றிருந்த கொரோனா தொற்றுக்குள்ளான சிப்பாய் ஒருவரின் நெருங்கிய உறவினர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடற்படைச் சிப்பாயின் ஊடாகவே இந்தப் பெண்ணுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்தது என்றும் இவர் ஏற்கனவே சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்த அனைவரும் ஆண்களாவர். தற்போது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேவேளை நாட்டில் கொரோனா தொற்றுக் காரணமாக ஏற்கனவே 8 ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

பிலியந்தலையைச் சேர்ந்த 82 வயதுடையவர் வீட்டில் திடீரென சுகவீனமுற்ற நிலையில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்திருந்தார். உயிரிழந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனா தொற்றிருந்தமை கண்டறியப்பட்டது. எனினும் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் பட்டியலில் அவரை சுகாதார அமைச்சு இன்னமும் சேர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் கொரோனாவால் இறந்தோரின் எண்ணிக்கையை அரசு குறைத்துக் காட்ட முற்படுகின்றதா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. (எ22)

## போதனா....

பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை விடுதிகளில் சேர்க்கப்பட்டிருந்த 6 பேர், மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவில் சேர்க்கப்பட்ட 9 பேர், முல்லைத்தீவு பொது மருத்துவமனையிலிருந்து ஒருவர், வவுனியா பொது மருத்துவமனையிலிருந்து 6 பேர், விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 27 பேர் என்று 49 பேரிடம் மாதிரிகள் பெறப்பட்டிருந்தன.

கொரோனா தொற்றுத் தொடர்பான பி.சி.ஆர் சோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் முதல் முறையாக நேற்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 49 பேரின் மாதிரிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களில் எவருக்கும் தொற்றில்லை என்று முடிவு வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்றும் இன்றும் சோதனை நடவடிக்கைகள், உள்ளக வேலைகள் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

(ஒ,5,20)

# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்




வாகரை பிரதேசத்தின் குஞ்சக்குள கிராமத்தில் ஊரடங்கால் பாதிக்கப்பட்ட 80 ஆதிவாசி குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)




கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிளாலி கிராமத்தில் 62 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன் கனடாவின் மொன்றியலில் வசிக்கின்ற ஜொலி ரவல்ஸ் நிறுவுநர் ஐயாத்துரை பரமேஸ்வரனின் தனிப்பட்ட நிதியுதவியில் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)



சுன்னாகம் ஐயனார் ஆலய தர்மகர்த்தாக்களும் பரிபாலன சபையினர் மற்றும் தொண்டர்களும் இணைந்து லண்டன் ஐயனார் ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்பில் செல்லவளவு, 'கல்லாரை, சூழானை, ஐயனார் கோவிலடி போன்ற இடங்களில் வசிக்கும் 100 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்கினர். (ம-ந)




குமாரபுரம், தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சில பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு லண்டனைச் சேர்ந்த கந்தப்பிள்ளை தீலிபனின் நிதி உதவியில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)








கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட 25 முதியவர்களுக்கு அத்தியாவசிய உணவுகள் மற்றும் மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. ஓம் சிறீ சற்குரு சரவணபவ சேவா அறக்கட்டளை வழங்கிய நிதி உதவியின் மூலமே மேற்படி உதவித் தொகை வழங்கப்பட்டன. ஒட்டிசுட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட நீதிபுரம், கற்குவாரி, ஒலுமடு, புதிய கொலனி மற்றும் மாங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கே மேற்படி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (ம)




பொலிகண்டிகிராமத்தில் நாளாந்த கூலி வேலை செய்யும் 30 குடும்பங்களுக்கு தலா 1,500 ரூபா பெறுமதியுடைய உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இலங்கைத் தமிழரசுக்கட்சி உறுப்பினர் இளங்கலைஞர் ஆ.முல்லைதிவ்யன் இந்த உலர் உணவுப் பொதிகளை வழங்கினார். (ம-159)





கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வாழும் மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம-150)

# வீதியில் கடலுணவு விற்பனை; பயணிப்பதில் மக்கள் சிரமம்

## சாவகச்சேரியில் இந்த நிலை

**சாவகச்சேரி மே. 5**

**சாவகச்சேரி, நகரசபையின் கடலுணவுகள் விற்பனை அலகு கட்டடத்துக்கு முன்பாக கடலுணவுகள் விற்பனை செய்யப்படுவதால், தனங்களப்பு வீதியூடாக மக்கள் பயணிக்க முடியாத அவலம் ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

நாட்டில் கொரோனா தொற்றுக் காரணமாக சந்தைகள் மூடப்பட்டன. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் வேளைகளில் சந்தையைச் சுற்றியுள்ள வீதிகளின் மூலமே சந்தை இயங்குகின்றது. தனங்களப்பு வீதியில் கடலுணவுகள் விற்பனை அலகின் முன்பகுதியில் வீதியோரத்தில் கடலுணவுகள் விற்பனை செய்யப்படுகின்றன. அதனால் எழும் துர்நாற்றம் வீதியில் செல்வோருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துகின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

சந்தையின் கடலுணவுகள் விற்பனை அலகு கட்டடங்களுடன் விசாலமான இடப்பரப்பைக் கொண்டுள்ளது. அதனுள் பெருமளவு வியாபாரிகள் தமது வியாபாரத்தை மேற்கொண்டால் வீதியில் செல்வோருக்கு இடைஞ்சல் இல்லாமலும் துர்நாற்றம் குறைந்த நிலையிலும் பயணிக்க முடியுமென பொதுமக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி மட்டுமல்ல தற்காலிக சந்தைகள் இயங்கும் அனைத்து இடங்களிலும் வியாபாரிகள் பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளான சமூக இடைவெளிகளைப் பேணுதல், முகக்கவசம் அணிதல் போன்றவற்றை மேற்கொள்வதில்லை. இதேவேளை சந்தையில் வியாபாரம் செய்வோர் முகக் கவசம், அணிவதில்லை. வீதியோரங்களில் வியாபாரிகளை அனுமதிக்கும், சுகாதாரப் பகுதியினர் அந்தப் பகுதி சுகாதாரமானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கிருமித்தொற்று நாசினிகளை விசிறுவதில்லை என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரிடம் கேட்டபோது, மக்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவதில்லை. அதனால் விற்பனை அலகு திறக்க அனுமதிவழங்கவில்லை- என்றனர். (பு-9)

# தக்காளி, பூசணிக்கு சந்தை வாய்ப்பு

யாழ். குடாநாட்டில் வீழ்ச்சியடைந்திருக்கும் தக்காளிப்பழம் மற்றும் பூசணிக்காய் போன்றவற்றை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு, சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஜசுபி பழரசத் தொழிற்சாலை நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்முறை போகத்தில் தக்காளிப்பழம், பூசணிக்காய் என்பன அதிக விளைச்சலைப் பெற்றுள்ளன.

எனினும் தொடர்ச்சியான ஊரடங்கு நடைமுறையால் குடாநாட்டு விவசாய உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாது செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால் ஜசுபி பழரச தொழிற்சாலை விவசாயிகளிடம் தக்காளிப்பழம், பூசணிக்காய் போன்றவற்றைக் கொள்வனவு செய்ய முன்வந்துள்ளது.

சந்தைப்படுத்த விரும்பும் விவசாயிகள் ஜசுபி பழரச தொழிற்சாலையுடன் தொடர்பு கொண்டு வழங்க முடியும் என்று நிறுவனம் அறிவித்துள்ளது. (சு-17)

# கோப்பாயில் பொலிஸார் ரோந்து

யாழ்ப்பாணம்,மே 5

வலி. கிழக்குப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுவோரைக் கையும் மெய்யுமாகப் பிடிப்பதற்குப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வாரம் கோப்பாய் வடக்குப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டோரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கொரோனா வைரஸ் தொற்றை அடுத்து மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், பரவலாகக் கசிப்பு உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இதனையடுத்து பொலிஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (சு-17)

# யாழ்.நகருக்குள் சனக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 5

ஊரடங்குச் சட்டம் நேற்றுத் தளர்த்தப்பட்டதை அடுத்து யாழ்.நகரில் மக்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டது.

மக்கள் சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்காது செயற்பட்டதை அவதானித்த பொலிஸார், விரைந்து செயற்பட்டு சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தினர்.

வர்த்தக நிலையங்களில் மக்களின் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டது. புதன்கிழமை இரவு தொடக்கம் தொடர்ந்து ஊரடங்கு நடைமுறைக்கு வரவுள்ளதால், மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்ய முண்டியடித்தனர்.

அதேவேளை நகருக்குள் தேவையற்ற விதத்தில் நடமாட வேண்டாம் என்று பொலிஸார் மக்களிடம் கேட்டுள்ளனர். (சு-17)

# மரக் கடத்தல் மூவர் கைது

மன்னார், மே 5

பாலை மற்றும் முதிரை மரக் குற்றிகளைக் கடத்தினரென மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர், மற்றுமொருவர் தப்பிச்சென்றுள்ளார் என்று மடுப் பிரதேச வனவளப் பிரிவினர் தெரிவித்தனர்.

மன்னார் மடுப்பிரதேசத்துக்கு உட்பட்ட ஒதுக்குக் காடு கோவில் மோட்டைப் பகுதியில் கடந்த 1ஆம்,3ஆம்திகதிகளில் பாலை மற்றும் முதிரை மரங்களை சட்டவிரோதமாக வெட்டி அவற்றைப் பலகைகளாக அரிந்து கொண்டு சென்ற போது அவர்கள் கைது செய்யப்பட்டனர். இதன்போது மற்றுமொருவர் தப்பிச் சென்றுள்ளார். அவரைப் பொலிஸார் தேடிவருகிறனர் என்று தெரிவிக்கப்பட்டது. (பு-213)

# ஊடகவியலாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலி

யாழ்ப்பாணம்,மே 5



சர்வதேச ஊடக தினத்தை முன்னிட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, யாழ். ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பிரதான ஈகைச் சுடரை மூத்த ஊடகவியலாளரும், அமையத்தின் தலைவருமான ஆ.சபேஸ்வரன் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து ஊடக அமையத்தின் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உலகளாவிய ரீதியில் கொவிட் 19 நோய்ப் பரவல் உச்சமடைந்திருக்கின்ற சூழலில், ஊடகங்கள் மீதுள்ள சமூகப் பொறுப்பில், சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னெடுப்பதில் பெருமை கொள்கின்றோம். மூன்று தசாப்த காலப் போராட்டச் சூழலில் எமது சகபாடிகளான பல ஊடகவியலாளர்களைப் பறிகொடுத்தும், கொலை அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும் எதிர்கொண்டும் பணியாற்றிய தமிழ் ஊடகவியலாளர்களுக்கு கொவிட் 19 நோய் பரம்பல் மத்தியில் பணியாற்றுவது புதிதாக இருக்கவில்லை.

ஆனாலும் மக்களுக்காக கொவிட் 19 தொற்று நோய் தீவிரமடையும் நிலையில் சமூக மட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியதாரீமீகப் பொறுப்பை உணர்ந்தே ஊடகவியலாளர்கள் செயற்படுகின்றனர்.

கொவிட் 19 வைரஸ் தொற்றுச் சூழலை முன்னிறுத்தி ஜனநாயக கட்டமைப்புகள் மற்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்காத் சர்வாதிகார நடவடிக்கைகள் மூலம், வாய் மூடியிருக்க மக்களையும், ஊடகங்களையும் அச்சுறுத்தும் போக்கொன்றின் மத்தியில் சர்வதேச ஊடக சுதந்திர தினம் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டியதாகவுள்ளது.

உலகின் ஏனைய நாடுகளில் காணக்கூடியதைப் போன்றே இலங்கையிலும் தீவிர நோய்த் தொற்று நிலைமையைக் கட்டுப்படுத்துவதில் ஒருங்கிணைக்கப்பட்ட பொறிமுறை இல்லாதேயுள்ளது. இதனால் அரசாங்கம் உட்பட அனைத்து பொறுப்புவாய்ந்த அரசதுறையினரையும் விமர்சிப்பதற்கும், கேள்வி கேட்பதற்கும் ஊடகங்களுக்கு உரிமையுண்டு என்பது சொல்லித் தெரியவேண்டியதொன்றல்ல. நாட்டில் நிலவுகின்ற அசாதாரண சூழ்நிலையில் அவ்வாறானதொரு ஊடகச் செயற்பாட்டுக்கான மிகப் பொருத்தமான அரச கொள்கையொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது.


அதேபோன்றே தற்போதைய சூழலில் பொதுமக்களுக்குச் சார்பாக செயற்படும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பும் மிக முக்கியமானதாகும்.

எமது நிலைப்பாட்டை ஏற்றுச் செயற்படும் சகோதர ஊடக அமைப்புக்கள் மற்றும் சர்வதேச ஊடக அமைப்புக்களும் இத்தகைய நெருக்கடியான சூழலில் மீண்டும் நட்புறவுடன் கைகளைப் பற்றிக்கொள்கின்றோம்.

இந்த நிலையில் கடந்த பல ஆண்டுகளாகக் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் ஆக்கப்பட்ட எமது சக ஊடக நண்பர்களுக்கு நீதி கோரி போராடிவரும் நாம் இவ்வாண்டிலும் அதே கோரிக்கையை மீண்டும் முதன்மைப்படுத்தி வலியுறுத்த தவறப்போவதில்லை.

கொவிட் 19 தொற்றின் பின்னரான சூழலில் ஆட்குறைப்பென்ற பேரில் முன்னெடுக்கப்படும் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப்பணியாளர்களது வேலை இழப்பினைத் தவிர்த்தல், பிரதேச ஊடகவியலாளர்கள் தமது தொழில் பாதுகாப்புடன் ஈடுபடக்கூடியதான பாதுகாப்பு உடைகள், கவசங்கள் மற்றும் வசதிகளை உருவாக்கி வழங்குதல், நெருக்கடிகள் மத்தியிலும் பாதுகாப்பற்ற சூழலில் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்படுதல் மற்றும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் குடும்பங்களுக்கான நிவாரணம், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சமூக ஊடகச் செயற்பாட்டாளர்கள் விடுதலை மற்றும் சமூக ஊடகங்கள் மீதான அச்சுறுத்தலைத்தடுத்தல், கொவிட் 19 தொற்றின் பின்னரான சூழலில் பணியாற்றும் ஊடகவியலாளர்களை பாகுபாடின்றி இணைத்து செயற்பட அரச நிர்வாக மையங்கள் முன்வருதல் உள்ளிட்ட கோரிக்கைகளை ஆட்சியாளர்களிடமும், சர்வதேச ஊடக அமைப்புக்களிடமும், ஊடக நிறுவன உரிமையாளர்களிடமும் நெருக்கடி மிகுந்த இந்தச் சூழலில் விநயத்துடன் கோரிநிற்கிறோம்- என்றுள்ளது. (சு-37)

## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 01 . 1931 | 21 . 04 . 2020 |

**வேலாயுதர் கதிர்காமு**

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனாகவும் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளராகவும் எமது பாடசாலைக்கு அரும்பெரும் பணியாற்றிய வே.கதிர்காமு அவர்களின் மறைவு பாடசாலைக்கு பேரிழப்பாகும். அன்னாரின் மறைவால் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர், அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்.**
**யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.**

## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 08 . 1932 | 01 . 05 . 2020 |

அமரர்

**இராயப்பு அக்னேஸ்**

எம்மத்தியில் இருந்து பிரிந்து சென்ற எம் பாசத்திற்குரிய அன்னைக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்து முடிவில்லாத ஒளியினுள் சேர்த்தருளும் இறைவா.

**பிரிவால் துயருறும்**
**அகஸ்ரீன் (மைத்துனர்)**
**யேக்கப் அலெக்சாந்திரியா (சகோதரி மைத்துனர்)**
**சற்குணராஜா சந்திரா (சகோதரி மைத்துனர்)**
**சுதாகரன் (மகன்)**

## மரண அறிவித்தல்



**திருமதி தங்கமுத்து சிவசுப்பிரமணியம்**
**(ஓய்வுநிலை ஆசிரியை-யா/அருணோதயக்கல்லூரி)**

விசவெட்டி. அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போது பொற்பதி வீதி. கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து சிவசுப்பிரமணியம் கடந்த (28.04.2020) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனிஷ்ட அதிபர் சிவசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும். ஆனந்தக்குமாரசாமி. சிவகுருநாதன். ரவீந்திரன். சாந்தகுமார். சறோஜினிதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும். நளாயினி. வாசுகி. சூசன். ஜெகதீஸ்வரி. கனகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும். சங்கீதா. சாரங்கன்-நிலாயினி. கஜவதனன்-வாணி. ஜனகன். ராஜீவ்-ரஜிதா, லக்ஷிதா-யோகாநந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். மிஷானா. அஜீஷன். நிவீஷன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (29.04.2020) புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74/1. பொற்பதி வீதி.
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

**தகவல்:**
**கனகேஸ்வரன் (மருமகன்)**
**ஓய்வுநிலை ஆசிரியர்.**
**தொ.பே: 077 795 3581,**
**077 899 3561, 021 222 0081**

**வாழைக்குலைகள் தேவை**

கப்பல், சீனிக் கதலி ஆகியவை மட்டும் இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 076 937 5167

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

**நல்லூர் பிரதேச சபை**
**கொக்குவில்**

**2020 ஆம் ஆண்டிற்கான இறைச்சிக் கடைகளுக்குரிய நாளாந்த குத்தகை கேள்வி மனு கோரல் - திகதி நீடிப்பு**

மேற்படி கேள்வி மனு கோரல் தொடர்பில் 13.03.2020 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி பத்திரம் வழங்குதல் 15.05.2020 நண்பகல் 12.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கேள்வி பத்திரம் சமர்ப்பிக்கும் நேரம் அன்றைய தினம் (15.05.2020) பிற்பகல் 2.00 மணி வரையாக மாற்றப்பட்டுள்ளதுடன் கேள்வி திறக்கும் நேரம் பிற்பகல் 3.00 மணி என்பதையும் அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.**

## 09ஆம் ஆண்டு நினைவஞ்சலி




| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 . 08 . 1990 | 05 . 05 . 2011 |

**செல்வி நடராசா கிருத்திகா**

எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்கே
நிஜம் ஒன்று நிழலாய் மாறி
கண்முன்னே வாழ்ந்து கனவாகி
ஆண்டுகள் ஒன்பது ஆனபோதும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்

**கச்சாய் தெற்கு, கொடிகாமம்.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 . 08 . 1936 | 04 . 05 . 2020 |

**பொன்னன் குணரத்தினம்**

புத்தூரைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் குணரத்தினம் (ஓய்வு பெற்ற முதுநிலை கணக்காளர்) நேற்று (04.05.2020) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன்-மீனாட்சி தம்பதியரின் மூத்த புத்திரனும், விநாயகமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான காங்கேசு-கண்மணி தம்பதியரின் மருமகனும், அன்பரசி (தொழில்நுட்பவியலாளர்), கலையரசி (பொறியியலாளர்-கண்டி), திருக்குமரன் (முதுநிலை விரிவுரையாளர்-யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), ஞானக்குமரன் (ஊடகவியலாளர்), எழிலரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், வாசுதேவன் (பொறியியலாளர்), குணசிங்கம் (பொறியியலாளர்), தயாநிதி (ஆசிரியர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), சுகிர்தா ஆகியோரின் அன்பு மாமனும், யதுசன், கோசிகன், பிரபாத், பிரவீன், தேஜஸ்வினன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சாதனா, சாளினி, ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8th km post,
**பருத்தித்துறை வீதி,**
**கோப்பாய் மத்தி.**

**தகவல்:**
**மகன்-கு.திருக்குமரன்**
**0777 910 654**

# அமைச்சின் செயலரின் இடமாற்றம் முறைகேடா?

*வடக்கு அரசியல் கட்சி உறுப்பினர் தேர்தல் ஆணைக்குழுவில் முறைப்பாடு*

யாழ்ப்பாணம், மே 5

வடக்கு மாகாண அமைச்சு ஒன்றின் செயலாளரை தேர்தல் காலத்தில் இடமாற்றம் செய்தமை தவறு என்று வடக்கில் இயங்கும் அரசியல் கட்சி ஒன்றின் முக்கிய உறுப்பினர்தேர்தல்ஆணைக்குழுவின் தவிசாளரை நேரில் சந்தித்து தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அமைச்சு ஒன்றின் செயலாளர் ஒருவர் அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டார். அந்த இடமாற்றம் சட்டமீறல் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இருப்பினும், குறித்த இடமாற்றம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு நாடாளுமன்றத் தேர்தலின் முன்பே ஒப்புதல் வழங்கியதன் பெயரிலேயே மேற்கொண்டதாக மாகாண சபையால் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

இந்தநிலையில், இடமாற்றம் முறையற்ற வகையில்தான் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்து சில ஆவணங்கள் சகிதம் ஓர் அரசியல் கட்சியின் முக்கியஸ்தர் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரியவை நேற்று முற்பகல் சந்தித்து விவரங்களைச் சமர்ப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் இந்த விடயம் மேலும் மீளவும் பரிசீலிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-105)

# தன்வந்தரி பகவானுக்கு விஷேட பிரார்த்தனை

சண்டிலிப்பாய் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ தன்வந்தரிபகவானுக்கு தினம்தோறும் விஷேட பிரார்த்தனைகள் நடைபெற்றவண்ணம் இருக்கின்றன. விரத புண்ணியதினமான நேற்றுமுன்தினம் விஷேட அபிஷேக ஆராதனை நடைபெற்றது. பிரார்த்தனைகளை வீணாகான குரு முதல்வர் சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள் நடத்தி வருகின்றார். (த)

# சாவகச்சேரி நகர நூலகங்கள் மீண்டும் வழமைக்கு!

சாவகச்சேரி நகரசபையின் சாவகச்சேரி, மீசாலை, நுணா வில் ஆகிய பொது நூலகங்கள்நேற்றுத்திறக்கப்பட்டுவழமையான சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

தொடர் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் பொது நூலகங்கள் மூடப்பட்டிருந்த நிலையில், நேற்று மீளத் திறக்கப்பட்டன.

வாசிப்புபகுதி மற்றும் நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி ஆகியவை நேற்றுத் தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

**வீடு வாடகைக்கு**

139. இராசாவின் தோட்டம். யாழ்ப்பாணத்தில் இணைந்த குளியலறையுடன் ஒரு அறை. சமையலறை. விறாந்தை வாடகைக்கு உண்டு

தொடர்பு: 077 691 4229

# மரண அறிவித்தல்கள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 04 |
| 04 | 05 |
| 1940 | 2020 |

## கந்தையா மகாதேவன் (சின்னத்தம்பி)

ஈஞ்சடி சுதுமலை வடக்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மகாதேவன் நேற்று (04.05.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-ஆச்சிமுத்து தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற முருகேசு-அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும், மகாதேவியின் (மகா) அன்புக் கணவரும், மகேந்திரன், முழுமதி, காலஞ்சென்ற சத்தியசீலன், ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவாஜினி, ரமேஸ் ஆகியோரின் அன்பு மாமனும், சியாணி, சுபாணி, ஆரணி, ஆருரன், மதுசன் ஆகியோரின் பேரனும், பத்மநாதன், செல்வராணி, செல்வரட்ணம், பாக்கியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# தீயில் எரிந்தது வீடு! 3 பிள்ளைகளுடன் குடும்பம் நிர்க்கதி

### மன்னாரில் சோகம்

மன்னார், மே 5

மன்னார் எமில் நகர் கிராம அலுவர் பிரிவுக்குட்பட்ட ஜிம்றோன் நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்று தீயில் எரிந்து அழிந்துள்ளது. சொந்த வீடு, அத்தியாவசியப் பொருள்கள் ஏதுமின்றி அந்தக் குடும்பம் நிர்க்கதியானது.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை நண்பகல் இடம்பெற்றது.

கணவன் கடற்தொழிலுக்கு சென்றிருந்த நிலையில் மனைவி சமைத்துக்கொண்டிருந்த பொழுது திடீரென வீடு தீப்பற்றியது என்று தெரிவிக்கப்பட்டது. அயலவர்கள் மற்றும் நகரசபையின் தண்ணீர் பவுசரின் உதவியுடன் தீ அணைக்கப்பட்ட போதும் கற்கள் அடுக்கப்பட்டு ஓலையால் மேயப்பட்ட வீடு என்பதால் அந்த வீடு முற்றாக எரிந்தது.

இந்தச் சம்பவத்தால், மூன்று பிள்ளைகளைக்கொண்ட அந்தக் குடும்பம் மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. வீடு மாத்திரம் அல்லாமல் பாவனைக்கு என ஆடைகளோ அத்தியாவசிய உணவுப் பொருள்களோ இன்றிக் காணப்படுகின்றனர்.

கிராம அலுவலர், சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் குறித்த பகுதிக்கு வருகை தந்து நிலைமையைப் பார்வையிட்டனர். (ப-56)

# கடற்படை வீரரின் தந்தைக்கு கொரோனா

வவுனியா, மே 5

வவுனியா பம்பைமடு கொரோனா தனிமைப்படுத்தல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த கடற்படை வீரர் ஒருவரின் தந்தைக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 200 க்கும் மேற்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப்படுத்தப்படுத்தப்பட்டு வருகின்றனர். வவுனியா பம்பைமடு முகாமுக்கு கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 216 பேர் அண்மையில் கொண்டுவரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அங்கு தங்கவைக்கப்பட்டிப்பவர்களுக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பரிசோதனையில் செவனகலையை சேர்ந்த வெலிசறை கடற்படை வீரர் ஒருவரின் தந்தைக்கு கொரோனோ தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ஐ-110)

# மரண அறிவித்தல்



## தம்பிப்பிள்ளை குருநாதன்

சுன்னாகம் கொத்தியாவத்தையைப் பிறப்பிடமாகவும் V.H. Lane இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை குருநாதன் நேற்று (04.05.2020) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-இளையபிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், கமலாசினியின் (மல்லிகா) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சற்குணலிங்கம், அகிலநாதன், சுகநாதன், ஜெகநாதன், லோகநாதன் மற்றும் தவமணி (சுன்னாகம்), முத்துலட்சுமி, நந்தினி, சுகந்தினி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சண்முகலிங்கம், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், கணேசலிங்கம் மற்றும் கமலேஸ்வரி (வவுனியா), சுப்பிரமணியம் (கண்டி), பூமணி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்சினி, காலஞ்சென்றவர்களான மதன், ஜனார்த்தனன் மற்றும் ஜனகன், நிருஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுரேஸ்கரன், ஜெயவதனி ஆகியோரின் மாமனாரும், பானுஷா ரேனுஷா, தஸ்பின், நிதர்ஷனா, யதுர்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

V.H. ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, இருபாலை.

தகவல்:
குடும்பத்தினர்.



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 | 04 |
| 10 | 05 |
| 1953 | 2020 |

## பொன்னன் நடராசா (முத்துலிங்கம்)

கோண்டாவில் வடக்கு வாகீஸ்வரியை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு நவரட்ணராஜா வீதியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னன் நடராசா (முத்துலிங்கம்) நேற்று (04.05.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன்-செல்லம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரன்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சுகிர்தராஜ், கமல்ராஜ், பபீசன், பிரதீசன், பிரபாகர் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்றவர்களான தியாகராசா, பவளம், சந்திரன், பரமேஸ்வரி, தர்மகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயாளினி, சிவயோகநாயகி, மயூரி, நிசாந்தினி, தனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும், டனுற்றா, கோபிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
15
07
1943



விண்ணில்
05
04
2020

மண்கும்பான் கிழக்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கில் வசித்தவரும், தற்போது சென்னையில் வசித்தவருமான

அமரர்
### ஆறுமுகம் தளையசிங்கம்
(யாழ்ப்பாணம், திருநெல்வேலி பிரபல வர்த்தகர் (A.T.S)

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை சென்னையில் அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
10
12
1940



மறைவு
05
04
2020

அமரர் திருவாட்டி
### சிவபாக்கியவதி சாம்பசிவம்

கடந்த 05.04.2020 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவி அமரர் திருவாட்டி சிவபாக்கியவதி சாம்பசிவம் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மாரீசன்கூடல்,
இளவாலை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
27
05
1961



மறைவு
30
04
2020

### சண்முகநாதன் சத்தியவரதன்

இணுவில் மேற்கை, பிறப்பிடமாகவும், சுவிஸ் (Zurech) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சத்தியவரதன் (சந்திரன்) கடந்த (30.04.2020) வியாழக்கிழமை சுவிஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் புஸ்பலீலாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கருணானந்தன் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும் அன்பரசியின் அன்புக் கணவரும், கஸ்தூரியின் அன்பு தந்தையும், சத்தியச்செல்வி (சாந்தா), அருள்வரதன் (சத்தியன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணேசரட்ணம், அரியராசா மற்றும் செல்வராசா, மகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும், இராசமணி, சிவயோகமணி ஆகியோரின் பெறாமகனும், ரவீந்திரநாதன், விஜயலக்சுமி ஆகியோரின் மைத்துனரும், ரஜிதரன், ரஜீவன், ரஜிப்பிரியன், ரஜிந் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹஜர்றாஜ், கஜராகினி, கஜராம் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2020) செவ்வாய்க்கிழமை சுவிஸ் (Zurech) இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"சத்தியகிரி",
செட்டி லேன், இணுவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

T.P: 077 624 8930, 077 258 5121

## மரண அறிவித்தல்

தோற்றம்
01
11
1969



மறைவு
24
04
2020

### குணபாலசிங்கம் விஜயலக்ஷ்மி

யாழ். கீரிமலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Aachen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குணபாலசிங்கம் விஜயலக்ஷ்மி கடந்த (24.04.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் தர்மபூபதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சானைக்குட்டி-பானுமதி தம்பதிகளின் அன்பு மருமகளும், குணபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், பிரவீன், பிரதீபன், ஜீவிதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவஞான சுந்தரம் (அப்புலிங்கம்), ஜெகதீஸ்வரி (தங்கா), மகாராஜா (அப்பன்) மற்றும் விஜயகுமாரன் (சின்னண்ணை-சுவிஸ்), சந்திரகலா (கலா-கொழும்பு), பிரபாகரன் (குஞ்சன் -லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான யோகபாலசிங்கம், தனபாலசிங்கம் மற்றும் சறோஜினிதேவி, ஜெயபாலசிங்கம், தவபால சிங்கம், இரஞ்சினிதேவி, மாலினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.05.2020) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்றைய தினம் அவரின் கீரிமலையில் அமைந்துள்ள பூர்வீக இல்லத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கீரிமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## 751...

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 10 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதையடுத்துக் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 194 ஆக உயர்ந்துள்ளது.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 751 பேரில் தற்போது 549 நோயாளிகள் 7 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே மேலும் 26 வைத்தியசாலைகளில் 137 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ22)

## போக்குவரத்து...

பிரதமர் மகிந்த ராஜபக்ச தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், கடிதம் ஒன்றை நேரில் வழங்கினார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையில் அரச அதிகாரிகளின் வினைத்திறனான சேவை முக்கியமானது. தற்போது வடக்கு மாகாண ஆளுநர் வடக்கில் தங்கி நிர்வாகத்தைக் கவனிப்பது அவசியமானது. எனினும் வடக்கு மாகாண ஆளுநர் வடக்குக்கு வெளியே தங்கி நின்றே தற்போது பணிகளை மேற்கொள்கின்றார். அதனால் அதிகாரிகளிடம் இருந்து வினைத்திறனான சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இது தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும்.

அதேவேளை, மாவட்டத்துக்கு வெளியே பொருள்களைக் கொண்டு செல்வதற்காக வழங்கும் 'பாஸ்' நடைமுறையில் வடக்கில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. வடக்கில் இந்தப் 'பாஸ்' நடைமுறை இறுக்கமாக்கப்பட்டுள்ளதால் வடக்குக்குப் பொருள்களைக் கொண்டு வருவதில் வர்த்தகர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். நாட்டின் ஏனைய பாகங்களில் 'பாஸ்' நடைமுறையில் இறுக்கம் காணப்படாத நிலையில் வடக்கில் மட்டும் நெருக்குதல்களை மேற்கொள்வது ஏற்புடையதல்ல. அது தொடர்பாகவும் கவனம் எடுக்க வேண்டும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் நேற்று மாலை இடம்பெற்ற கூட்டத்திலும் ஆராயப்பட்டது. கூட்டத்தில் பங்கேற்றிருந்த பஸில் ராஜபக்ச பாஸ் தொடர்பான நடைமுறைக்கு பதில் வழங்கினார். எதிர்வரும் 11ஆம் திகதிக்குப் பின்னர் பாஸுக்கான தேவை இருக்காது. மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும், என்று பதிலளித்தார். (ஒ,5)

## நாடாளுமன்றை....

கூட்டமைப்பின் விசேட கூட்டு அறிக்கையை தலைவர் இரா.சம்பந்தன் அலரி மாளிகையில் நேற்று நடந்த கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் நேரில் சமர்ப்பித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தின் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரின் பெயரில் இந்தக் கூட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தக் கூட்டு அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்ப ட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாலும் ஏனைய அரசியல் கட்சிகளாலும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்பட்டது. இந்தக் கோரிக்கைக்கான பதில் இதுவரை எதிர்மறையானதாகவே உள்ளது.

இந்தப் பின்னணியில், பிரதமர் மஹிந்த ராஜபக்ச கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் இன்று அலரி மாளிகையில் கூட்டமொன்றுக்கு அழைத்துள்ளார்.

பின்வரும் காரணிகளின் காரணமாக நாடும் மக்களும் மிகவும் நெருக்கடியான நிலைமையில் உள்ளனர்: உலகளாவிய கொள்ளை நோய் கொரோனா வைரஸ் படிப்படியாக மோசமடைந்து வருகின்றது. எமது நாட்டிலிருந்து அதனை முழுமையாக ஒழிப்பதற்கு இன்னும் அதிகமான வேலைகள் செய்யப்பட வேண்டும். பாரதூரமான விளைவுகளோடு அது மேலும் மோசமடையும் என்ற நியாயமானதோர் அச்சம் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. இது தொடர்பாக நாட்டின் ஒன்றிணைந்த முயற்சிகள் தேவை.

1994ஆம் ஆண்டிலிருந்து கடந்த 25 ஆண்டுகளாக ஐந்து நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதி பதவிக் காலங்களில் நடைபெற்ற அனைத்துத் தேசிய தேர்தல்களிலும் மக்கள் தமது இறைமையை - தமது வாக்குரிமையைப் பிரயோகித்து 1978 ஆம் ஆண்டு அரசமைப்பை நிராகரித்துள்ளதோடு, அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகிய தமது இறைமையின் ஆட்சி அதிகாரங்களின் மூன்று அம்சங்களையும் சட்டவாக்க, நிறைவேற்று மற்றும் நீதித் துறை அதிகாரங்கள் உள்ளடக்கி புதிய அரசமைப்பொன்றை நிறைவேற்றுவதற்கான ஆணையை வழங்கியுள்ளனர். தமது இறைமையைப் பிரயோகித்து மக்கள் வழங்கிய இவ்வாணை நிறைவேற்றப்படாததோடு, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக மக்களால் நிராகரி க்கப்பட்டு வரும் ஓர் அரசமைப்பின் கீழேயே நாடு தொடர்ந்து ஆளப்படுகின்றது.

2015ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றம் பிரதானமாக மூன்று விடயங்களைக் கையாண்டு அதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, நாடாளுமன்றத்துக்கான தேர்தல் சீர்திருத்தங்கள், தேசிய பிரச்சினையான தமிழர் பிரச்சினை ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றைக் கையாண்டு புதிய அரசமைப்பொன்றைத் தயாரிப்பதற்கு ஒரு வழிநடத்தல் குழு மற்றும் பல்வேறு விடயங்களுக்குப் பொறுப்பான உப குழுக்கள் மற்றும் ஒரு வல்லுநர் குழு ஆகியவற்றோடு அரசமைப்புச் சபை என்ற பெயரில் தன்னை ஒரு முழு நாடாளுமன்றக் குழுவாக மாற்றுவதற்கு ஒரு மனதாகத் தீர்மானித்தது.

ஆரம்பிக்கப்பட்ட பல குழுக்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்துவம் வகித்தன. அங்கு பெருமளவு கருத் தொருமைப்பாடு நிலவியது; குழுக்களின் அறிக்கைகள் அரசமைப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன. நாடாளுமன்றம் கலைக்கப்படும்வரை இந்த நடைமுறை தடைப்பட்டபோது, அது இறுதிக் கட்டத்தை அடைந்திருந்தது.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளும் தேசிய பிரச்சினையானது, அனைத்து அரசியல் கட்சிகளினாலும் 1991ஆம் ஆண்டிலிருந்து அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகளினாலும் கையாளப்பட்டு வந்துள்ளது; அதில் பெருமளவு முன்னேற்றங்கள் அடையப்பட்டுள்ளன.

இந்தப் பிரச்சினை எவ்வாறு கையாளப்பட்டு ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு வழியில் எவ்வாறு தீர்த்து வைக்கப்படும் என்பது தொடர்பாக நாட்டுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பகிரங்க வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய வாக்குறுதிகளின் அடிப்படையில் சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெற்றுக்கொள்ளப்பட்டது.

தேசிய சமாதானத்தின் நலனுக்காகவும், பிராந்திய அமைதியின் நலனுக்காகவும் உலக சமாதானத்தின் நலனுக்காகவும் இவ்வாக்குறுதிகள் காப்பற்றப்படவேண்டும். இல்லையேல், பாதிக்கப்பட்டவர்களான தமிழ் மக்களுக்குத் துரோகமிழைப்பதற்காக சர்வதேசச் சமூகமும் ஏமாற்றப்பட்டதாகவே தோன்றும்.

மேலே விபரிக்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் தீர்த்து வைக்கப்படவேண்டும் என்பதாலும், நாட்டின் நலனுக்காகவும் அதன் மக்களின் நலனுக்காகவும் இந்த விடயங்கள் அனைத்தையும் நியாயமானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான ஒரு முறையில் தீர்த்து வைப்பதற்கு எமது ஆதரவை வழங்க நாம் தயாராக உள்ளோம் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதற்காகவும் பிரதமருடனான இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவேண்டும் என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

நீங்கள் அழைப்பு விடுத்திருக்கும் இந்தக் கூட்டம் நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதற்கான ஒரு மாற்றீடாக அமையாது, அமையவும் முடியாது என்பதை நாம் அழுத்தம் திருத்தமாக அறிவிக்க விரும்புகின்றோம். எமது கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது தோன்றியுள்ள பல அரசமைப்பு மற்றும் சட்டப் பிரச்சினைகளைக் கையாளுவதற்காக நாடாளுமன்றம் மீளக் கூட்டப்பட வேண்டும் என்றும், நாடாளுமன்றத்தால் மட்டுமே அவற்றைக் கையாள முடியும் என்றும் நாம் உறுதியான கருத்தைக் கொண்டிருக்கின்றோம் என்றுள்ளது. (எ22)

## சிறுமி...

கைது செய்யப்பட்டனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமியின் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சிறுமி சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே அவர் கர்ப்பமாக இருக்கின்றார் என்பது தெரியவந்தது. சிறுமியை சுமார் 6 மாதங்களாக சந்தேக நபர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தியுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். சந்தேக நபர்கள் பொலிஸ் விசாரணையில் உள்ளனர். விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (த106,26)

## குணமானார்...

னையில் சிகிச்சை பெற்று வந்தார். அவர் தற்போது குணமடைந்து வீடு திரும்பியுள்ளார் என்றும், அவர் தொடர்ந்து 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுக் கண்காணிக்கப்படுவார் என்றும் கடற்படை தெரிவித்துள்ளது. (எ)

## அரசியல்...

னத்துக்குக் கொண்டு வந்தனர். "நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு கவனம் செலுத்தி பொதுமன்னிப்பின் பெயரில் அவர்களை விடுதலை செய்ய வேண்டும். மிக நீண்டகாலமாக அவர்கள் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிலர் 20 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக சிறைகளில் உள்ளனர். ஆகவே, அவர்களுக்கான குறுகிய கால தண்டனை வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டும். கடந்த காலங்களில் அவ்வாறு சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரிலும் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையிலும் பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்" என்று கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளிக்கும்போதே "தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் விவகாரத்தில் நாம் அக்கறையாக இருக்கின்றோம். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளோம். நீண்டகாலமாக சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பதில் உள்ள சட்ட முறைமைகளை ஆராய்கின்றோம். சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளைப் பொது மன்னிப்பில் விடுவிக்க முடியுமா என்பது குறித்து ஜனாதிபதியுடன் பேசவுள்ளேன். அவரின் நிலைப்பாடு என்னவோ அதனை உங்களுக்கு அறியத்தருகின்றேன்" என்றார். (எ22)

## பெண்...

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையைச் சேர்ந்த 78 வயதான பாத்திமா அன்சி மொஹமட் சுல்தான் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 30ஆம் திகதி காய்ச்சல் காரணமாக போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு கொரோனா சோதனை முன்னெடுக்க ப்பட்டது. தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து அவர் சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டார். இந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்தார். (ஒ,5)

## தனக்கு....

உள்ள தனது பிள்ளைகளைப் பார்க்க முடியாத மன விரக்தியில் அவர் இருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் கிளிநொச்சியில் நேற்று முன் தினம் இடம்பெற்றது. சம்பவத்தில் செல்லத்துரை அன்ரனி (வயது 60) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, ஜெயபுரம் பகுதியில் உள்ள தனது சகோதரியின் வீட்டுக்குச் சென்ற குடும்பத்தலைவர், ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதால், யாழ்ப்பாணம் அளவெட்டிப் பகுதியில் உள்ள அவரது வீட்டுக்குத் திரும்ப முடியாது அங்கேயே சிக்கிக்கொண்டார்.


இந்த நிலையிலேயே அவர் மண்ணெண்ணெயை ஊற்றி தனக்குதானே தீவைத்து எரிந்துள்ளார். தீயில் எரிந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இறப்புத் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ப26)

# ரோகித்தின் வளர்ச்சிக்கு டோனி முழுக்காரணம்!!

## கம்பீர் புகழாரம்

புதுடெல்லி, மே 5
மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டங்களில் ரோகித் சர்மா சிறந்த வீரராக உள்ளார் என்றால் அதற்குக் காரணம் டோனிதான் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரர் கம்பீர்.

இது தொடர்பில் கம்பீர் மேலும் தெரிவித்ததாவது:



மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் தற்போது உலகின் சிறந்த வீரர் ரோகித் சர்மாதான். ஒட்டுமொத்தத்தில் அவரை சிறந்தவர் என்று சொல்ல முடியாது. ஆனால் இப்போது சிறந்தவராக விளங்குகிறார். ஒருநாள் கிரிக்கெட்டில் மூன்று முறை இரட்டை சதம் அடித்த ஒரே வீரர், ஒரு உலகக்கிண்ணத் தொடரில் 5 சதங்கள் அடித்த முதல் வீரர் ரோகித்தான். விராட் கோலியையும், ரோகித் சர்மாவையும் ஒப்பிட்டு பார்ப்பது கடினம். விராட் கோலி நம்ப முடியாத ஒரு வீரர். அவரது சாதனைகளே அதற்கு சான்று. ரோகித் சர்மா இந்த அளவுக்கு உயர்ந்த நிலையை எட்டியிருக்கிறார் என்றால், அதற்கு காரணம் முன்னாள் தலைவர் டோனிதான். ஆரம்ப காலத்தில் ரோகித் சர்மா அணியில் இடம்பெறாத போதுகூட அவரிடம் பேசி டோனி ஊக்கப்படுத்திக் கொண்டே இருப்பார்.

அவரை ஒருபோதும் ஓரங்கட்டியது கிடையாது. அந்த சமயத்தில் வேறு எந்த வீரருக்கும் இவ்வளவு ஆதரவு அவர் கொடுத்ததில்லை. இதே போல் விராட் கோலியையும் டோனி சரியாகப் பயன்படுத்தினார். இன்றைய தலைமுறையில், சுப்மான் கில், சஞ்சு சாம்சன் உள்ளிட்ட இளம் வீரர்களும் திறமையானவர்களே. டோனியின் பாணியில் அவர்களுக்கு கோலி, ரோகித் சர்மா ஆகியோர் ஆதரவு அளிக்க வேண்டும். அதை செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன்' - என்றார். (ம)

## கொரோனா வைரஸ் பாதிப்பு

# ஆபத்தான ஆடுகளத்தில் விளையாடுவது போன்றது

## கங்குலியின் ஒப்பீடு இது

புதுடெல்லி, மே 5
கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுத்தியுள்ள பாதிப்பு, கரடுமுரடான அபாயகரமான ஆடுகளத்தில் டெஸ்ட் போட்டி விளையாடுவதுபோல் உள்ளது என கங்குலி தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று இந்தியாவில் நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. நேற்றுக் காலை நிலவரப்படி பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 40 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

இந்த நிலையில் கொரோனா தொடர்பில் கங்குலி மேலும் தெரிவித்ததாவது:

தற்போதுள்ள நிலை கரடுமுரடான ஆடுகளத்தில் டெஸ்ட் போட்டி விளையாடுவதற்கு இணையான சூழ்நிலையாக உள்ளது. தற்போதுள்ள சூழ்நிலை மிகவும் கடினமாக உள்ளது. ஆனால், ஒருங்கிணைந்து இதில் வெல்வோம் என்ற நம்பிக்கை உள்ளது" என்றார். (ம)



# தற்கொலை செய்யலாமென 3 தடவைகள் எண்ணினேன்!!

## சமி உருக்கம்


புதுடெல்லி, மே 5
இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான சமி, மூன்று தடவைகள் தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தேன் என்று தெரிவித்து ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளார்.

சமூக வலைத்தளமொன்றில் இடம்பெற்ற உரையாடலிலேயே சமி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சமி மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் நான் காயமடைந்தபோது முழுமையாகக் குணமடைய எனக்கு 18 மாதங்கள் ஆகின. அது என் வாழ்க்கையில் மிகவும் வேதனையான மற்றும் நெருக்கடியான காலம் என்று சொல்லலாம். நான் மீண்டும் விளையாடத் தொடங்கியபோது சில தனிப்பட்ட சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. அப்போது தற்கொலை செய்துகொள்ளலாம் என மூன்று முறை யோசித்தேன் - என்றார். (ம)

# இந்திய அணியில் இருந்து காரணமின்றி நீக்கப்பட்டேன்

## ஆர்.பி.சிங் வெளிப்படைப் பேச்சு




புதுடெல்லி, மே 5
இந்திய அணியில் இருந்து காரணமின்றி நீக்கப்பட்டேன். எனது நீக்கம் எந்த அடிப்படையில் அமைந்தது என்று இதுவரை எனக்குப் புரியவில்லை - என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் இடதுகை வேகப் பந்;து வீச்சாளர் ஆர்.பி.சிங். தனது நீக்கம் தொடர்பில் ஆர்.பி.சிங் மேலும் தெரிவித்ததாவது:

இந்திய அணிக்கு தேர்வு செய்யப்படுவதற்கு முன்னமேயே டோனியும் நானும் சந்தித்து விட்டோம். இருவரும் சேர்ந்து நேரம் செலவழிப்போம். பிறகு அவர் தலைவர் ஆனார். அவரின் கிரிக்கெட் வாழ்க்கை மேலே ஏறிக்கொண்டேயிருந்தது. என் கிரிக்கெட் வாழ்க்கையோ வீழ்ந்துகொண்டே இருந்தது. இன்றும் கூட நானும் டோனியும் சேர்ந்து நேரம் செலவழிப்போம். ஊர் சுற்றுவோம். ஆனால் கிரிக்கெட்டைப் பொறுத்தவரை எனக்கும் அவருக்கும் மாறுபட்ட கருத்துகள் உள்ளன.

சிறந்த கிரிக்கெட் வீரராக என்ன செய்ய வேண்டும் என்று நான் டோனியிடம் கேட்டேன். அவர் அதற்கு ஆம் நீ கடினமாக உழைக்கிறாய் ஆனால் அதிர்ஷ்டம் வேண்டும் என்றார். அவர் கூறியதை ஏற்றுக் கொள்கிறேன் என்றார். (ம)



போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைவரும் யுவண்டஸ் அணியின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ, அன்னையர் தினத்தை முன்னிட்டு தனது தாயாருக்கு ஆடம்பரக் காரொன்றை பரிசாக வழங்கியுள்ளார். (ம)



பிரபல குத்துச்சண்டை வீரரும் பெரும் கோடீஸ்வரருமான புளொய்ட் மெவதர் ஆடம்பர மாளிகையொன்றை அமைத்துள்ளார். மதுப் பிரியரான அவர் மது வகைகளை சேமிப்பதற்கென்றே தனி அறையை தனது வீட்டில் நிர்மாணித்துள்ளார். அது தொடர்பான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன. (ம)

# கொரோனாவை அழிப்பதற்காக சர்வதேச ஒத்துழைப்புத் தேவை

## பிரிவினைகள் வேண்டாம் என பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள்




உரோம், மே 5

கொரோனாவுக்குத் தடுப்பூசி கண்டறிய சர்வதேச ஒத்துழைப்பு தேவை என்று பாப்பரசர் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். சர்வதேச நாடுகள் தமக்குள்ள பிரிவினைகளை மறந்து ஓரணியில் செயற்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

கொரோனா தடுப்பூசி தொடர்பில் ஆரம்பம் முதலே பல்வேறு கருத்துக்களை வலியுறுத்தி வருகின்றார் பாப்பரசர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸுக்குப் பாதுகாப்பான, உறுதிவாய்ந்த தடுப்பூசி கண்டறியும் பணி பல நாடுகளில் ஏற்கனவே நடந்து வருகிறது. நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதில் வெவ்வேறு மருந்துகளை பயன்படுத்திய அனுபவங்களை விஞ்ஞானிகளும், மருத்துவர்களும் பகிர்ந்து வருகிறார்கள். தடுப்பூசி கண்டுபிடிப்பதில் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம். நோய்வாய்ப்பட்ட ஒருவர் மருத்துவ வசதி பெறுவதில், உலகளாவிய அத்தியாவசிய தொழில்நுட்பங்களைப் பெறும் உரிமை அளிக்கப்பட வேண்டும் - என்றார். (ம)



## வழமைக்கு திரும்புகிறது ஈரான்

தெஹ்ரோன், மே 5

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் குறைவான இடங்களில் மசூதிகள் மற்றும் பள்ளிக்கூடங்கள் விரைவில் திறக்கப்படும் என ஈரான் அதிபர் ஹசன் ரவுகானி தெரிவித்துள்ளார்.

சீனாவில் கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் அதற்குப்பிறகு ஈரானில்தான் அதிவேகமாக பரவியது. இதனால் கடந்த மார்ச் மாதத்தில் இருந்து பொது இடங்களில் கூடுவது போன்ற நிகழ்ச்சிகளுக்கு தடைவிதிக்கப்பட்டன. தற்போது கொரோனா ஓரளவு கட்டுக்குள் வந்ததை அடுத்து ஊரடங்கு உத்தரவைத் திரும்பப் பெறுவதற்கும், பள்ளிக்கூடங்களைத் திறப்பதற்கும், மசூதிகளைத் திறப்பதற்கும் ஈரான் அரசு பரிசீலித்து வருகின்றது. (ம)

## பிரான்ஸில் குறைகிறது கொரோனா

பரிஸ், மே 5

கடந்த மூன்று வாரங்களின் பின்னர் பிரான்ஸில் கொரோனாவின் தாக்கம் வெகுவாகக் குறைந்து வருகின்றது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. இதுகுறித்து பிரான்ஸ் ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், 'பிரான்ஸில் கடந்த மார்ச் மாதம் கொரோனா வைரஸின் தீவிரம் அதிகமாக இருந்ததைத் தொடர்ந்து நாடு முழுவதும் முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரான்ஸில் கொரோனாவினால் ஏற்படும் தொற்று மற்றும் பலி எண்ணிக்கை குறைந்து வருகிறது. மே 11ஆம் திகதிக்குப் பிறகு பிரான்ஸில் ஊரடங்கு உத்தரவு படிப்படியாகத் தளர்த்தப்படும் - என்றுள்ளது. (ம)

### அமெரிக்க எதிர்ப்பையும் மீறி

## சீனாவைப் பாராட்டியுள்ளது உலக சுகாதார நிறுவனம்



பீஜிங், மே 5

கொரோனா விவகாரத்தில் அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி சீனாவை உலக சுகாதார நிறுவனம் பாராட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் விவகாரத்தில் ஆரம்பம் முதலே சீனாவுக்கு ஆதரவாக உலக சுகாதார நிறுவனம் செயல்பட்டு வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம்சாட்டி வருகிறார். உலக சுகாதார நிறுவனத்துக்கு அளித்து வந்த அமெரிக்க நிதியையும் அவர் நிறுத்தி விட்டார். கடந்த 30ஆம் திகதியன்றும் சீனாவின் மக்கள் தொடர்பு அமைப்பாக உலக சுகாதார நிறுவனம் செயல்பட்டு வருவதாக சாடியதுடன், அதற்காக அந்த அமைப்பு வெட்கப்பட வேண்டும் என்றும் தாக்கினார். உலகம் முழுக்க கொரோனா வைரஸ் தொற்றுநோய் 2 லட்சத்து 40 ஆயிரத்துக்கு மேற்பட்டோரை கொன்றுள்ள நிலையில் அமெரிக்கா மட்டுமின்றி ஜேர்மனி, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும்கூட கொரோனா வைரஸ் பரவலுக்கு சீனா மீது குற்றம் சாட்டுகின்றன. ஆனால் சீனா கொரோனாவில் இருந்து மீண்டுள்ளதற்காக அந்த நாட்டைப் பாராட்டியுள்ளது உலக சுகாதார நிறுவனம். இது தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

சீனாவில் கொரோனா வைரஸ் தீவிரமாக தாக்கியவர்கள் யாரும் இல்லை. வுகானில் ஒருவர்கூட இந்தத் தொற்று பாதித்தவர் இல்லை என்று வந்துள்ள தகவல்கள் வரவேற்கத்தகுந்தவை. இந்த சாதனைக்காக அவர்களுக்கு பாராட்டுகள். கட்டுப்பாடுகளை எப்படி தளர்த்துவது, எப்படி இயல்பு நிலைக்கு சமூகத்தை கொண்டு வருவது, இந்த வைரசுடனே நாம் எப்படி வாழ்ந்து முன்னோக்கி செல்வது என்பதையெல்லாம் சீனாவிடம் இருந்து உலகம் கற்றுக்கொண்டுள்ளது - என்றார். (ம)

### பொருளாதாரத்தில்

## அமெரிக்க மஜிக் மீண்டும் நிகழும்!


### பங்குச்சந்தை நிபுணர் வாரன் பபெட் தெரிவிப்பு

தெஹ்ரோன், மே 5

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மிகப்பெரும் சரிவைச் சந்தித்துள்ள அமெரிக்க பொருளாதாரம் விரைவிலேயே மீளும், அமெரிக்க மேஜிக் மீண்டும் நிகழும் என்று பங்குச்சந்தை கோடீஸ்வரர் வாரன் பபெட் தெரிவித்துள்ளார்.

தற்போது 89 வயதாகும் வாரன் பபெட், பங்குச் சந்தை முதலீட்டு நிறுவனமான பெர்க் ஷயர் ஹாத்வே நிறுவனத்தை நடத்தி வருகிறார். இந்த நிறுவனம் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 5 ஆயிரம் கோடி டொலர் நிகர இழப்பைச் சந்தித்தது. எனினும் இதுகுறித்துக் கவலைகொள்ளாத பபெட் அமெரிக்கப் பொருளாதாரம் மீண்டெழும் என்று உறுதியாகக் குறிப்பிடுகின்றார்.

தற்போது மிகவும் நெருக்கடியான காலகட்டத்தை எதிர்கொண்டுள்ளோம். மஜிக் மற்றும் அற்புதங்களை அமெரிக்காவின் பொருளாதாரம் நிச்சயம் நிகழ்த்தும். அது மறுபடியும் நிகழும் என்றார் அவர். (ம)



A/L Physics
Colombo Hindu Ladies College ஆசிரியரினால் யாழ். மாணவர்களுக்கான (Zoom) இனூடான வகுப்புக்கள்
A/L 2020, 2021 Batches, Time 6-9 p.m
•Monday-Mechanics •Tuesday- Paper revision
•Thursday-Fields •Saturday-Heat
A/L 2022, Batch - Wednesdays
•Bilingual (Tamil & English Medium) with translated past papers from 1979-2019
A.Jenukananth
B.Sc Engineering (Civil)
(மொறட்டுவ பல்கலைக்கழகம்)
076 546 3054

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.